பொருளடக்கம்

வரலாற்று வைர மணிகள்

★

தொகுப்பு :

மௌலானா மௌலவீ கன்ஜுல் உலூம்

அல்ஹாஜ் V. U. A. யூசுப் அன்ஸாரி (ரஹ்)

ஹாஜி M.A. ஷாஹுல் ஹமீது

& ஸன்ஸ்

புத்தகங்கள் அச்சிடுபவர்கள்,

வெளியிடுபவர்கள், விற்பனையாளர்கள்

நெ. 10 [illegible] திருவல்லிக்கேணி,

சென்னை-5 [illegible] 12335 86440

வெளியீடு :

அனஸ் புக் சென்டர்

81, அங்கப்பநாயக்கன் தெரு,

சென்னை - 1.

முதல் பதிப்பு

போன் : 512341

முதற் பதிப்பு ஹிஜ்ரி 1418 ஜமாதியுல் ஆகிர்
கி. பி. 1997 அக்டோபர்

ரூபாய் 10-00

கிடைக்குமிடம்:

[illegible] புக் கம்பெனி
[illegible] வளாகம்
[illegible] அங்கப்ப நாயக்கன் தெரு
சென்னை-600 001.
[illegible]

[illegible] பிரிண்டர்ஸ் திருச்சி-2 போன்: 700416

பொருளடக்கம்

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

பதிப்புரை

—★—

நாடறிந்த நாவன்மையாளரும், திருகுர்ஆன் விரிவுரை யாளருமான அல்லாமா யூசுப் அன்ஸாரி ஹஜ்ரத் கிப்லா (ரஹ்) அவர்களுக்கு அறிமுகம் தேவையில்லை.

அவர்களால் தொகுக்கப்பட்ட இந்நூல் முழுமை பெறா திருந்த காரணத்தினால் இதுகாறும் வெளியிடப்படாமல் இருந்தது. இந்நூலை விரிவு படுத்தி நிறைவு செய்வதில் எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிய சென்னை மஸ்ஜிதே மஃமூர் பள்ளிவாசலின் தலைமை இமாம் மௌலானா அல்ஹாஜ் ஹாபிஸ் முஹம்மது இல்யாஸ் காஸிமி ஹஜ்ரத் அவர்களுக்கும் நிறைவு செய்யும் பணியிலும் இந்நூலை அச்சிட்டு முடிப்பதிலும் ஆலோசனை வழங்கி அச்சிட்டுத் தந்த வடகரை மௌலானா என். எம். ஹஸன் முஹம்மது பாகவீ ஹஜ்ரத் (இமாம், தென்னூர் ஹைரோடு பள்ளிவாசல், திருச்சி) அவர்களுக்கும் எங்களின் நன்றி உரியது.

சமுதாயம் முழுமைக்கும் குறிப்பாக ஜும்ஆ பேருரை நிகழ்த்துவோருக்கு இந்நூல் பெரிதும் பயன்படும் என நம்பு கிறோம். அல்லாஹ் நம் அனைவரின் சேவைகளை அங்கீகரிப் பானாக. ஆமீன்.

வஸ்ஸலாம்

அனஸ் புக் சென்டர்

பொருளடக்கம்
முதற் பதிப்பு: ஹிஜ்ரீ 1418 ஜமாதியுல் ஆகிர்
கி. பி. 1997 அக்டோபர்

ரூபாய் 10–00

கிடைக்குமிடம்:

நூஹா புக் கம்பெனி
மஸ்ஜிதே ம:மூர் வளாகம்
168/7, அங்கப்ப நாயக்கன் தெரு
சென்னை-600 001.
போன்: 512341

ஜோதி பிரிண்டர்ஸ் திருச்சி-2 போன்: 700416

பொருளடக்கம்

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

பதிப்புரை

—★—

நாடறிந்த நாவன்மையாளரும், திருகுர்ஆன் விரிவுரை யாளருமான அல்லாமா யூசுப் அன்ஸாரி ஹஜ்ரத் கிப்லா (ரஹ்) அவர்களுக்கு அறிமுகம் தேவையில்லை.

அவர்களால் தொகுக்கப்பட்ட இந்நூல் முழுமை பெறா திருந்த காரணத்தினால் இதுகாறும் வெளியிடப்படாமல் இருந்தது. இந்நூலை விரிவு படுத்தி நிறைவு செய்வதில் எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிய சென்னை மஸ்ஜிதே மஃமூர் பள்ளிவாசலின் தலைமை இமாம் மௌலானா அல்ஹாஜ் ஹாபிஸ் முஹம்மது இல்யாஸ் காஸிமி ஹஜ்ரத் அவர்களுக்கும் நிறைவு செய்யும் பணியிலும் இந்நூலை அச்சிட்டு முடிப்பதிலும் ஆலோசனை வழங்கி அச்சிட்டுத் தந்த வடகரை மௌலானா என். எம். ஹஸன் முஹம்மது பாகவீ ஹஜ்ரத் (இமாம், தென்னூர் ஹைரோடு பள்ளிவாசல், திருச்சி) அவர்களுக்கும் எங்களின் நன்றி உரியது.

சமுதாயம் முழுமைக்கும் குறிப்பாக ஜும்ஆ பேருரை நிகழ்த்துவோருக்கு இந்நூல் பெரிதும் பயன்படும் என நம்பு கிறோம். அல்லாஹ் நம் அனைவரின் சேவைகளை அங்கீகரிப் பானாக. ஆமீன்.

வஸ்ஸலாம்

அனஸ் புக் சென்டர்

பொருளடக்கம்

--★--

بسم الله الرحمن الرحيم

1. நபிமார்களின் தலைவர் ஹஜ்ரத் முஹம்மத் (ஸல்)

மகத்தான குணம் பெற்ற மாண்பாளர் முஹம்மது(ஸல்) அவர்கள் இறையாணை ஏற்று மக்கா துறந்து மதீனம் புக ஹிஜ்ரத் செய்ய முற்பட்ட சமயம், உலக ஆலயம் இறையில் லம், கஅபா வினுள் இரண்டே இரண்டு ரக்அத்துத் தொழுது விட்டுப் புறப்பட ஆசை கொண்டு அப்போது கஅபாவின்— சாவியினைத் தன்வசம் வைத்துக் கஅபாவின் காவலராயிருந்து பணியாற்றிய உத்மான் ஷைபா என்பாரை அணுகி ஷய்பா அவர்களே! இரண்டு நிமிடங்கள் கஅபாவைத் திறந்து விடுங் கள். நான் தொழுது கொள்கிறேன் என்று கோரி நின்றார் கள். ஷய்பாவோ குணத்தின் குன்று கோமான் நபி (ஸல்) அவர்களை வெருட்டுகிறார். மீண்டும்மிகப்பணிவாகஇரண்டே இரண்டு ரக்அத்துத்தான் அனுமதியுங்கள் என்று நெஞ்சில் நிறைந்த நபி மணி (ஸல்) கெஞ்சுகின்றார்கள். அப்போதும் இல்லை இல்லை முடியாது என்று ஷய்பா மிஞ்சுகிறார்.

அஞ்சலும் கெஞ்சலும், மிஞ்சலாகி மீண்ட போது மெய் யொளி நபிகள் பிரான் (ஸல்) அவர்கள் ஷய்பாவை நோக்கி ''ஷய்பா! ஒரு காலம் வரும். நீ நிற்கும் இடத்தில் நான் நிற் பேன். நான் நிற்கும் இடத்தில் நீர் இருப்பீர். அப்போது உம் விசாரணை எப்படி இருக்கும்?'' என்று விளம்பினார்கள். ''உமது கனவு'' என—ஷய்பா இடித்துரைத்துச் சென்று விட்டார். அண்ணலெம் பெருமானார்(ஸல்) அவர்கள் கஅபா வினுள் தொழ முடியாத நிலையில் இல்லம் வந்து அன்று

இரவே மக்கா துறந்து மதீனா கிளம்பிச்சென்றுவிடுகிறார்கள். மக்காவின் பதிமூன்று ஆண்டு கால வாழ்க்கையும் பயங்கர மான சோதனைகளை கஷ்டங்களையும் கடந்து மறந்து சென்றார்கள். ஹிஜ்ரத்துக்குப்பின் எட்டாம் ஆண்டு மக்காவை வெற்றி கொண்டவர்களாக மக்காவினுள் புகுந்தார்கள். முத லாவதாக கஅபாவில் தொழுகையை நிறைவேற்றினார்கள். ஆலயத்தின் திறவுகோல் மாநிலத்தின் மார்பிடமாம் மன் னர் நபி(ஸல்) அவர்களின் மாகரத்தில் வந்துசேருகின்றது.

கஅபாவின் வாசலில் நின்று கொண்டு ஷய்பாவைக் கூப் பிடுங்கள் என்றார்கள். நடு நடுங்க ஷய்பா வந்து நின்றார். ஷய்பா அன்று நான் இரண்டு ரக்அத்துத் தொழுதிட இரண்டு நிமிட அனுமதி கேட்டேனே ஞாபகம் இருக்கிறதா? என்று அண்ணல் நபி கேட்டார்கள். இருக்கிறது என்றார் ஷய்பா. அப்போது ஒரு காலம் வரும் நீர் நிற்கும் இடத் தில் நான் நிற்பேன். நான் நிற்கும் இடத்தில் நீர் நிற்பீர் என்று கூறினேனே நினைவு வருகிறதா? என்று மீண்டும் கேட்டார்கள் மேதகு நபி. ஆம். அந்தக்காலம் வந்துவிட்டது என்று அமைதியாகப் பதில் சொன்னார் ஷய்பா. இப்பொழுது உம் விசாரணை எப்படி இருக்க விரும்புகிறீர்? என்று அன்பொழுகக் கேட்டனர் அண்ணல் ரசூல்(ஸல்) அவர்கள். நான் கிருபை நபி முன் நிற்கிறேன் என்றார் ஷய்பா. அரு கிலிருந்த ஹஜ்ரத் அபூபக்கர், உமர்,அலி (ரலி) போன்றவர் கள் கஅபாவின் சாவியைத் தங்கள் வசம் ஒப்படைக்கவும், கஅபாவிற்குத் தாங்கள் ஊழியம் புரிந்திட வாய்ப்பளிக்கவும் வேண்டி நின்றார்கள்.

ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் ஷய்பாவைத் தண்டிப்பதை விடுத்துக் கஅபாவின் திறவு கோலை ஷய்பாவிடமே ஒப்படைத்தார்கள். அதுமட்டுமல்ல, மறுமை நாள் வரை சந்ததி சந்ததியாக—வழி, வழியாக — பரம் பரை—பரம்பரையாக வைத்து இருந்து கஅபாவுக்கு ஊழியம் செய்யுங்கள் தொண்டு புரிந்திடுங்கள் என்று சாவியை

ஒப்படைத்தார்கள். இன்று வரை கஅபாவின் சாவி அந்த ஷய்பாவின் வம்சாவழியினரிடத்தே இருந்து வருகின்றது. இப்படி உன்னத நிலைக்கு உதாரணம் செயல் படுத்தினார்கள். இரண்டு நிமிடம் இறைவனை வணங்க மறுத்து குறை மதிக் குளறுபடிகளால் குத்திப்பேசிய ஷய்பாவிடம் எட்டாண்டுகள் கடந்து அனைத்து அதிகாரங்களும் தன் வசம் குவிந்திருந்த போதும் தான் நினைத்தால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்; யாரிடம் வேண்டுமானாலும் சாவியை ஒப்படைக்கலாம் என்ற நிலையிருந்த போதும், அதே ஷய்பாவிடம் மறுமை நாள் வரை அவர் சந்ததியினரிடம் சாவி இருந்து வர வேண்டும் என ஒப்படைத்ததானது மகத்தான அந்த நற்குணத்தின் வெளிப்பாடல்லவா? உலக வரலாற்றில் இதற்கு இணையான ஒரு சம்பவத்தை இதைவிட ஒரு காட்சியைக்காண முடியாது. மன்னர் நபியின் மகத்தான குணத்துக்கு இதைவிடச் சிறந்த சான்றும் தேவையில்லை.

மக்கத்து வாழ், மாந்தர்கள் அனைவரும் புனித கஅபாவில் ஒன்று சேர அறிவிக்கப்பட்டு ஒவ்வொருவரும் தத்தமது அதிகாரத்தில் புரிந்து விட்ட அக்கிரமங்களைப் பயந்து வித விதத்து கிசு கிசுத்து ஒன்று திரண்டு நின்ற சமயம், பதின்மூன்று ஆண்டுகள் பண்பு நபிக்குத் தாங்கள் கொடுத்து வந்த துன்பங்கள்-துயரங்கள்-தொல்லைகள், அவர்கள் இதயத்தில் எழும்பிக் காட்சியளிக்கின்றன. குணக்குன்று கோமான் நபியவர்கள் தம் மக்கள் அனைவரையும் ஏறெடுத்துப் பார்த்தார்கள். தான் மக்காவில் இஸ்லாமியப் பிரச்சாரம் புரிந்திட ஆரம்பித்த காலை புதுப்புது தொல்லைகளை யோசித்து யோசித்துக் கொடுத்த கொடுமையாளர்கள் பலர் நிற்கின்றார்கள். அவர்கள் செய்த அக்கிரமச் செயல்களனைத்தும் செம்மல் நபி மனக்கண் முன் தோன்றி மறைகிறது.

சிறிய தந்தை ஹம்ஜா (ரலி) அவர்களை வஞ்சகமாகக் கொன்று அப்புனிதரின் உடலைக் கீறிக் கிழித்து குடலை மாலையெனக் கழுத்தில் சூடி ஈரலை மென்று துப்பி வக்கிரமம் இப்படித்தான் என்பதை இரக்கமில்லாது ஈனத்தனமாக

வெறி கொண்டு செய்த 'ஹிந்தா' என்பவள் நிற்கிறாள். எண்ணிலடங்கா துயரங்களைத் தங்களின் தீன் பணி துவக்க காலத்தில் அளித்த துன் மார்க்கர்கள் பலர் நிற்கின்றனர். அம்மக்கள் செய்த தொல்லைகள் எல்லாம் தூதர் நபி(ஸல்) அவர்கள் இதயத்திரை பளிச்சிட்டுக் காட்டியது. நாம் அனைவரும் அழித்தொழிக்கப்படுவது நிச்சயமே என ஒவ்வொருவரும் அச்சத்தால் வெட வெடுத்து வியர்க்க விறு விறுத்து நிற்கின்றனர், பயத்தால் ஏற்பட்ட அமைதி அன்று கஅபா முழுக்கக் குடி கொண்டிருந்தது. ஊசி விழுந்தால் கேட்கும் நிசப்தம். அமைதியைக் கிழித்துக்கொண்டு அன்பான குரலொன்று அம்மக்களை நோக்கித் தெறித்து விழுந்தது. அண்ணல் நபி (ஸல்) அவர்களே அக்குரலை வீசினார்கள். அல்லாஹ்வின் தூதரிடம் நீங்கள் எப்படி நடந்தீர்கள், கடந்த காலங்களில் எப்படி நடந்து கொண்டீர்கள் ஞாபகம் இருக்கிறதா? என்பதே அக்குரலின் வாசகமாகும். ஒரே குரலில் ஆம். என்று அனைவரும் கூறினார்கள். நீங்கள் என்னைப் பைத்தியக்காரன், பொய்யன், புரட்டன் என்றீர்கள் அல்லவா? ஆம் நீங்கள் எனக்கும் என் தோழர்களுக்கும் தாங்கள் எவ்வாறு இன்னல்கள் தந்தீர்கள் அல்லவா? ஆம், அவர்களை பகிஷ்காரம் செய்து ஒதுக்கி வைத்தீர்கள் அல்லவா? ஆம்... ஆம்...ஆம். எல்லாவற்றுக்கும் ஆம் தான். இனி தொல்லை தான் நிச்சயம் சந்தேகமே இல்லை. இப்படி அம்மக்கள் நம்பியே செத்தனர். பழிதான் தொலைந்தோம் என்று பயத்தால் அலறினர்.

புன்னகை தவழும் பூமான் நபி (ஸல்) அவர்கள் புன்முறுவல் பூத்திட பொய்மையாளர்களைப் பார்த்துக் கூறினார்கள்: எல்லோரும் செல்லுங்கள் சுதந்திரமாக! மக்காவிலேயே வாழ்ந்திடுங்கள் நிம்மதியாக! எவ்வித துன்பமும் பழியும் உங்களுக்குப் பிரதியிழைக்கப்பட மாட்டாது. இப்படியான ஒரு பிரகடனத்தை வெளியிட்டார்கள். இம்மகத்தான குணத்தையும்—மாண்பினையும், கண்ட மக்கத்து மக்கள் கூட்டங் கூட்டமாக இஸ்லாமியக் கோட்டைக்குள் நுழைந்தனர். இத்

தகு மகாபிய மாண்பினை உலக சரித்திரத்தில் வேறெவர் பொருட்டும் காண முடியாது. ஆகையால் குணத்தின் குன்று கோமான் நபி (ஸல்) அவர்களின் மகத்தான குணங்களைப் பின்பற்றி, பழி தீர்க்கும் படலங்களை விட்டும் நீங்கி, மன்னிக்கும் தன்மையை யேற்படுத்தி இஸ்லாமியர்க்கும், ஏனையோர்க்கும் உபகாரஞ் செய்யும் உயர்ந்த கொள்கையின் கீழ் வாழ்ந்திட உறுதி கொள்ளுங்கள். அதுவே அண்ணலாரின் பிறந்த நாளைக் கண்ணியப் படுத்துவதாகும் என்பதனை உணர்ந்து சங்கல்பம் கொள்வீர்களாக. அன்பான அல்லாஹ் நம்மனைவர்கட்கும் இம் மகத்தான குணங்களின்படி வாழ அருள் புரிவானாக! ஆமீன். துய்யவனே! தூய்மையாளனே!! துன்பம் நீக்கும் தயாளனே!!! ரஹ்மானே!!!!

கலப்படமற்ற ஈமானைப் பெற்று அகமும், புறமும் தூய நோக்கில் உன்னைப் பணிந்து வணங்கி மறுமையில் எவர்களின் நிறுவையும் எடையும் வலுவாக விருக்குமே அத்தகு சத்தியவான்கள் கூட்டத்தில் எங்கள் அனைவரையும் இணைத்து என்றென்றும் எங்கள் மீது உன்னருள் பொழிவாயாக!

2. அல்லாஹ்வின் வாள் காலித்இப்னு வலீத் (ரலி)

முஸ்லிம்களுக்கும் ரோமர்களுக்குமிடையே எர்மூக் என்கிற போர் நடைபெறுகிறது. அப்போர் அவ்விரு பிரிவினருக்கிடையே கடுமையடைந்து உச்ச கட்டத்தை எட்டியபோது ரோமர்கள் தங்களுடைய குரல்களை உயர்த்தி ஆரவாரம் செய்தனர். அவர்கள் ஆட்பலத்தின் மீதும் ஆயுதபலத்தின் மீதும் அதிக நம்பிக்கை கொண்டிருந்ததினால் தங்களுடைய பலத்தை எண்ணி மகிழ்வுற்று வெற்றியை உறுதி செய்து கொண்டு தங்கள் குரல்களை உயர்த்தி ஆர்ப்பரித்தனர். ஆனால் முஸ்லிம்கள் அல்லாஹ்வின் மீது அளப்பெரும் நம்பிக்கையும் உறுதியும் கொண்டிருந்ததினால் வெற்றி தோல்வியை அவனிடம் ஒப்படைத்துவிட்டு மிக்க அடக்கத்துடன் அதே நேரத்தில் அதிவேகமாகப் போராடிக்கொண்டிருந்தனர்.

இப்படி நடைபெற்றுக்கொண்டிருந்த போரில் வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வந்துகொண்டிருந்தன; முடிவாக முஸ்லிம்களின் பக்கம் வெற்றி வேகமாக வந்துகொண்டிருந்த தருணத்தில் ரோமர்களின் தளபதி ஜர்ஜா என்பவர் முஸ்லிம் படையின் தளபதி ஹழ்ரத் காலித் இப்னு வலீத் (ரலி) அவர்களை எதிர்பாராத வகையில் சந்தித்து விடுகின்றார். அப்பொழுது அவ்விருவரும் தங்களுக்கிடையே உண்மையின் அடிப்படையில் உயிர்ப்பாதுகாப்பை உடன்பாடு செய்து உரையாடத் துவங்கினர்.

ஜர்ஜா என்பவர் காலித் இப்னு வலீத் (ரலி) அவர்களை விளித்து, ''உங்கள் நபி முஹம்மது (ஸல்) அவர்கள் மீது உங்களிறைவன் வானிலிருந்து வாளொன்றை இறக்கி அதனை அவர்கள் உங்களுக்கு வழங்கினார்களா? அப்படி வழங்கியதன் காரணமாக நீங்கள் எப்பக்கம் அவ்வாளை வீசுகின்றீர்களோ அப்பக்கம் தோல்வியைத் தழுவிவிடுகிறதா?''

என்று கேட்டார். அதற்கு ''அப்படி எந்த ஒரு வாளையும் ஏந்தல் நபியவர்கள் எமக்குத் தரவில்லை'' என்று காலித் இப்னு வலீத் (ரலி) அவர்கள் கூறினார்கள். ''அவ்வாறாயின் அல்லாஹ்வுடைய வாள் என்று உமக்கு எவ்வாறு பெயர் வந்தது?'' என்று ஜர்ஜா கேட்டார். உடனே காலித் இப்னு வலீத் (ரலி) அவர்கள் பின்வருமாறு விளக்கமுரைத் தார்கள்.

''அருள் நபி முஹம்மது (ஸல்)வை அல்லாஹ் எங்களுக்கு அனுப்பி வைத்தான், அவர்கள் ''அல்லாஹ் ஒருவனே, அவனைத் தவிர வேறு நாயனே இல்லை'' என்ற ஏகத்துவக் கொள்கையை எங்களுக்குப் போதித்தார்கள். அப்போது அவர்களுடைய அழைப்பை ஏற்றுக்கொள்ளாமல் அவர்களை விட்டும் வெகுதூரம் விலகிச் சென்றுவிட்டோம். ஆயினும் எங்களிற் சிலர் ஏகத்துவக் கொள்கையை ஏற்று அவர்களை முழுக்க முழுக்க அடியொற்றி அவர்களின் அன்பைப் பெற பேரார்வம் கொண்டிருந்தனர். வேறு சிலர் அவர்களைப் புறக்கணித்து இன்னல்கள் பல கொடுக்கத் தொடங்கினர். அந்தோ? அவர்களுடன் நானும் இருந்து விட்டேனே'' என்று ஏங்கி பிரலாபித்துவிட்டு அப்பால், ''அல்லாஹ் அவனது நேர்வழி என்ற பேரொளியை எனது இருதயத்தில் பாய்ச்சினான். எனவே ஏந்தல் நபியவர்களின் போதனைகளை ஏற்று அவர்கள் காட்டிய இராஜபாட்டையில் கம்பீரமாக நடந்து அவர்களுக்காக என் உயிரையும் அர்ப்பணிக்கத் தொடங்கினேன். ஏகத்துவம் விண்முட்ட வளர்ந்து அதன் சுவைமிகு கனிகளை அவனியோர் பருகிப் பயனடைந்திட வேண்டும் என்கிற மேலாம் எண்ணத்தை மையமாகக் கொண்டு என் வாள் சுழலத் தொடங்கியது. அப்போது அண்ணல் நபியவர்கள் என்னை விளித்து''நீர் அல்லாஹ்வினுடைய வாள்; அல்லாஹ்வை நிராகரிப்பவர்களுடைய உடலுடன் அது உராயும்''என்றுரைத்துவிட்டு இறையுதவி எனக்குக் கிடைக்க பிரார்த்தனை செய்தார்கள். இப்பிரார்த்தனையின் காரணமாகவே என்னுடைய வாளுக்கு வலிவும் பொலிவும் ஏற்பட்டது. அவ்வாள் வீசப்பெறுகின்ற திக்கு தோல்வியைத்

தழுவும், இதனால் தான் எனக்கு ஸைபுல்லாஹ் ''அல்லாஹ் வின் வாள்'' என்ற பெயர் ஏற்படத் தொடங்கியது'' என்று கூறினார்கள்.

இவ்விளக்கத்தைப்பெற்ற ஜர்ஜா என்பவர் காலித் இப்னு வலீத் (ரலி) அவர்களை நோக்கி, ''நீங்கள் எக் கொள்கையின் பால் அழைக்கிறீர்கள்?'' எனக் கேட்டார். அதற்கு காலித் இப்னு வலீத் (ரலி) அவர்கள் ''வணங்குவதற் குரிய நாயன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை. அவன் தனித்தவன்; அண்ணல் நபியவர்கள் அல்லாஹ்வினு டைய அடியாரும் தூதருமாவார்கள் என்று உறுதியாக நம்பு வதின் பாலும் அல்லாஹ்விடமிருந்து அண்ணலவர்கள் கொண்டுவந்த வான்மறையின் வழியில் செல்வதினால் மட் டுமே மானிட முன்னேற்றம் கிடைக்கப்பெறும் என்ற நம்பிக் கையின் பாலும் நாங்கள் அழைக்கிறோம்'' என்று கூறினார் கள். ''அப்படியொருவர் உங்களுடைய கொள்கையை ஏற்று இஸ்லாமாகாவிடில் அவரை எப்படி நீங்கள் நடத்துவீர்கள்?'' என்று ஜர்ஜா கேட்டதற்கு, காலித் இப்னு வலீத் அவர்கள், ''அவர்களுடைய உயிர்களையும் உடைமைகளையும் பாது காப்பதற்காக ஜிஸ்யா என்ற பாதுகாப்பு வரியைச் செலுத்த வேண்டும், அப்படியவர்கள் செலுத்தி விட்டார்களாயின் அவர்களையும் அவர்களுடைய உடைமைகளையும் காப் பாற்றி அவர்களுக்கு முழு அமைதி அளிப்போம்'' என்று கூறி னார்கள். உடனே ஜர்ஜா என்பவர், ''இப்போது ஒருவர் உங்களுடைய கொள்கையை ஏற்று இஸ்லாமாகிவிட்டாராயின் அவருடைய நிலையும் ஆரம்பத்திலிருந்தே இஸ்லாத்தை ஏற் றாரே அவரின் நிலையும் என்ன? இவ்விருவருக்குமிடையே உயர்வு தாழ்வு உண்டா?எனக்கேட்டார். உடனே காலித்(ரலி) அவர்கள் ''அவ்விருவருடைய நிலையும் ஒன்றுதான். அவ் விருவருக்கிடையே வேற்றுமை இல்லை; உயர்வு தாழ்வு இல்லை; அவர் எங்களில் ஒருவர். ஆரம்ப காலத்தில் இஸ் லாத்தை ஏற்றவருக்கும் இவருக்கும் ஒரே அந்தஸ்துதான். எங்களில் எவரும் எவரைவிடவும் மேலானவரில்லை. முந்தி யவர் பிந்தியவரில்லை. அனைவரும் சமமானவரே, ஆதி

காலத்தில் இஸ்லாத்தை ஏற்றவரைவிட இன்று இஸ் லாத்தை ஏற்றவருககு அதிக சன்மானம் கிடைக்கப்பெறும்'' என்று கூறினார்கள். அது எப்படி? என்று ஜர்ஜா கேட்டார்.

அப்போது காலித் இப்னு வலீத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், ''நாங்கள் நபிகள் திலகம் முஹம்மது ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் இருந்தோம். அவர்களின் முகத்தில் இறையொளி பொழிந்து கொண்டிருப் பதைப் பார்த்தோம். வான் வஹி அவர்களுக்கு வருவதைக் கண்டோம். அவர்களின் அரிய உயரிய பண்புகளைப் பார்த் தோம். அவர்கள் காட்டிய பேரற்புதங்களைக் கண்டு களித் தோம், எனவே அவர்களை நம்பி இஸ்லாத்தை ஏற்று அவர்களுக்கு முற்றிலும் அடிபணிவது என்பது வியப் புக்குரியதல்ல; இயற்கையான ஒன்று தான். ஆனால் நீங் கள் இவற்றில் எதையும் பார்க்கவில்லை; கேட்கவில்லை, அவர்களைப் பார்க்காமலும் அவர்களுரையைக் கேட்காமலும் பேரற்புதங்களை அறியாமலும் இருந்து கொண்டு அவர்களை நம்பி அவர்கள் வழிசெல்வது எவ்வளவு மகத்தானது? எனவே எங்களையெல்லாம்விட புதிதாக ஈமான் கொண்டவர்கள் எவ் வளவு மேலானவர்கள்? எத்துணை அதிகமான சன்மானம் பெறக்கூடியவர்கள் என்பதை நான் சொல்லாமலேயே நீங் கள் அறிந்துகொள்வீர்கள்'' என்றுரைத்ததும் ஜர்ஜா என்பவர் கொஞ்சம் முன்வந்து, ''அல்லாஹ்வின் மீது ஆணையாக நீர் உண்மையை உரைப்பவர் தானே? ஏமாற்றம் எதுவும் வும் செய்து விடமாட்டீரே?'' என்று கேட்டார். அதற்கு காலித் இப்னு வலீத் (ரலி) அவர்கள், ''இறைவன் மீது ஆணையாக! நான் உம்மை ஒருக்காலும் ஏமாற்றமாட்டேன், உண்மையின் மீதே நிலைத்திருப்பேன்'' என்று உறுதியாக கூறியதும் ஜர்ஜா என்பவர் இன்னும் கொஞ்சம் முன்வந்து காலித் இம்னு வலீத் (ரலி) அவர்களின் கரங்களைப் பற்றிக் கொண்டு கண்கலங்கினார். உடனே அவரை காலித் இப்னு வலீத் (ரலி) அவர்கள், தனதறைக்கு அழைத்துச் சென்று அமர வைத்தார்கள். ஆனால் அவர் அங்கிருந்த தண்ணீரை

எடுத்து தனது மேனியின் மீது ஊற்றி சுத்தம் செய்து கொண்டு 'லாயிலாஹ இல்லல்லாஹ்' என்ற கலிமாவை ஓதி அப்பால் இரண்டு ரக்அத்துகள் தொழுதார், நிராகரிப்போரின் அணிக்கு தலைமை தாங்கி வாளேந்தி வந்த ஜர்ஜா, அல்லாஹ் ஒருவனே என்பதை ஏற்று அவர் முன் சரணடைந்திருப்பது விந்தையிலும் விந்தை! அது மட்டுமா? தனக்கிருந்த அனைத்து பாக்கியங்களையும் தூக்கி எறிந்து விட்டு ஏகத்துவ நம்பிக்கையில் உறுதி பெற்று நிராகரிப்போரோடு மிக உக்கிரமாகப் போர்புரியத் தொடங்கினாரென்றால் இதனை என்னவென்றுரைப்பது?

தமது படையின் தளபதியாக போருக்கு வந்த ஜர்ஜா எதிரணியில் நின்று கொண்டு கடும் வேகத்துடன் போராடுவதைக்கண்ட ரோமர்கள் சினமுற்று ஆவேசமடைந்து மிகவும் கொடுமையாக முஸ்லிம்களைத் தாக்கத் தொடங்கினர். ''உண்மையில் உறுதியுடனிருங்கள், அதர்மத்தை ஒழித்துக் கட்டுங்கள்'' என்று குரல் எழுப்பியவாறு முஸ்லிம்கள் போர் புரிந்து கொண்டிருந்தனர். போர் உச்சகட்டத்தை அடைந்தது. இத்தருணத்தில் காலித் இப்னு வலீது (ரலி) அவர்களும் ஜர்ஜாவும் எதிரிகளுடைய அணிகளில் அதிவேகமாகப் பாய்ந்து அவர்களை சிதறடித்து விட்டனர். அல்லாஹ்வுக்காகவும் அவனுடைய அருள் மார்க்கத்திற்காகவும் ஜர்ஜா என்பவர் போரிட்டுக் கொண்டேயிருந்தார். அன்று மாலை வரை போரிட்டுக் கொண்டேயிருந்தார். சூரியன் மலையினுள் மறைந்து அவனியில் இருள்படரும் நேரத்தில் எதிரிகளின் அணிகளிலிருந்து சரமாரியாக வந்த அம்புகள் ஜர்ஜாவின் உடலை சல்லடையாக்கின. அவர்கள் கீழே விழுந்தார்கள். அவர்களுடைய முகத்தில் இறை நம்பிக்கையின் பேரொளி பொழிந்து கொண்டிருந்தது. அப்படிப் பொழிந்து கொண்டிருந்த அந்த முகத்தைப் பார்த்து காலித் இப்னு வலீத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கண் கலங்கினார்கள்.

செல்வம், உயர்பதவி, உலகபாக்கியம் ஆகிய அனைத்தையும் அர்ப்பணித்து விட்டு அல்லாஹ் ஒருவனையே குறி

யாகக் கொண்டு அவன் வழியில் முழுமையாகப் போரிட்டு ஷஹீதாகி விட்ட ஜர்ஜாவே! உங்களுடைய ஆத்மா சாந்தி யடையட்டும்! அமைதி பெறட்டும்!! இறையருட் திவலை களில் குளுமை பெறட்டும்!!! என்று காலித் இப்னு வலீத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்.

ஜர்ஜா என்பவர் போரின் இடையில் இஸ்லாத்தை ஏற்று இரண்டு ரக்அத்துகள் தொழுதிருக்கின்றார்கள். அவர் களுக்கும் சிறு வயதிலிருந்து பெரும் வயதை அடைகின்ற வரை அறநெறி வழுவாமல் அரும் பணியாற்றிய உத்தமர் களுக்குமிடையே எந்த வேறுபாடுமில்லை. அவர்கள் அனை வருமே இறை சன்மானம் பெறுவதில் ஒரே அந்தஸ்தில் இருக்கின்றனர். அல்ஹம்துலில்லாஹ்.

...★...

3. இஸ்லாத்திற்காக உயிரிழந்த முஸ்அப் இப்னு உமைர் ரலியல்லாஹு அன்ஹு

'மாண்புறும் மக்காவாசிகளில் மணமிக்கவர் முஸ்அப் இப்னு உமைர் என்பவராகும்.' இவ்வாறு வரலாற்று ஆசிரி யர்கள் ஒரே குரலில் கூறுகின்றனர்.

முஸ்அப் இப்னு உமைர் செல்வமும் வளமும் கொழிக் கும் குடும்பத்தில் பிறந்தார்; மக்காநகர் வாலிபர்களில் மிக்க அறிவுள்ளவரும் ஆவார், அனைவருடைய உள்ளங் களையும் கவரும் விதத்தில் விலையுயர்ந்த ஆடைகளை அணிந்து கொண்டு கம்பீரமாக நடந்து செல்வார். அவரு டைய வளமான நிலை கண்டு அவரை 'வளமார் முஸ்அப்' என்ற சிறப்புப் பெயரிட்டு முஸ்லிம்கள் அழைத்து வந்தனர்.

மக்கமா நகரில் புதியதொரு மார்க்கத்தை மக்களிடையே மஹ்மூது நன்னபியவர்கள் பரப்பி வருகின்றார்கள்; அவ்

வாறு பரப்புவதற்கு அவர்கள் அர்கமுடைய இல்லத்தைப் பயன்படுத்தி வருகிறார்கள் என்ற செய்தி மக்கா நகரெங்கும் பரவிப் போயிருந்தது. அப்படிப் பரவிய மார்க்கம் முஸ்அப் இப்னு உமைருடைய உள்ளத்திலும் பரவத் தொடங்கியது. எனவே இம்மார்க்கத்தைப் போதிக்கும் கருணை நபியவர்களைக் கண்டு இன்புற வேண்டும் என்ற ஆர்வ மிகுதியால் காலை மாலை அர்கமுடைய இல்லத்திற்கு அவர் வந்து கொண்டிருந்தார்.

ஒரு நாள் மாலை சபா மலையடியிலிருக்கின்ற அர்கமிப்னு அபில் அர்கம் என்பவருடைய வீட்டிற்கு மக்கத்து மனிதர்களில் சிலர் வந்து கொண்டிருந்தனர். அப்படி வந்தவர்களில் வளமார் முஸ்அபும் ஒருவராக இருந்தார். ஏற்கனவே அவருடைய உள்ளத்தில் ஏக இறை உணர்வு அரும்பிக் கொண்டிருந்வது. அவர் அருள் நபியருகே வந்ததும் நபியவர்கள் தமதரும் வலக்கரத்தினால் அவருடைய நெஞ்சத்தைத் தொட்டார்கள். அருட் கரத்தின் இனிய குளுமை முஸ்அபின் உள்ளத்தில் அரும்பிக் கொண்டிருந்த ஏக இறை உணர்வை வளர்த்து மணம் கமழும்படிச் செய்தது. எனவே அவர் இனிய இஸ்லாத்தை ஏற்று இன்புற்றுத் திரும்பினார்.

முஸ்அபுடைய தாயார் செல்வ மிக்கவள். வலிவு மிக்கவள். அவளைக் கண்டதும் மற்றவர்கள் பயந்து நடுங்கும் தோற்றமுடையவள். முஸ்அப் இஸ்லாத்தை ஏற்று விட்டார் என்ற விஷயத்தை அவள் செவியேற்றதும் சினமுற்று சீறி எழுந்தாள். தன் கூட்டத்தினரையும் மக்காவின் தலைவர்களையும் ஒன்று திரட்டி அவர்களுக்கு முன்னால் முஸ்அப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை கொண்டு வந்து நிறுத்தி அவருக்கு எண்ணிறந்த துன்பங்களைக் கொடுத்தாள். இஸ்லாத்தை விட்டுவிட வேண்டும். அப்படியில்லையாயின் மிகமிகக் கடுமையான துன்பங்களுக்கு உள்ளாக்கப் படுவாய் என்று மிகக்கடுமையாக எச்சரித்தாள். ஆயினும் முஸ்அப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தனக்கிழைக்கப்பட்ட துன்பங்கள் யாவற்றையும் பொறுமையுடன் சகித்துக் கொண

டார். அவருடைய உள்ளம் நபியவர்களுடைய அருட்கரத்தின் குளுமையினால் ஆனந்தமடைந்திருந்தது. ஏக இறைவனின் உணர்வால் விம்மியிருந்தது. இதன் காரணமாக அவர்களுடைய கொடுமைகளைத் தாங்கிக் கொண்டு அவர்களைப் புறக்கணித்து தனது நம்பிக்கையில் உறுதியுடன் நிலைத்திருந்தார். இதனைக் கண்ட அவருடைய அன்னை வெகுண்டெழுந்து தனது வீட்டின் ஓர் அறையிலுள்ள தூணில் இரும்புச் சங்கிலிகளால் பிணைத்து இருக்கக் கட்டிவிட்டாள். இப்படிப்பட்ட கொடிய நிலையை அவர்கள் தாங்கிக் கொண்டு பல மாதங்கள் கண்ணீரும் கவலையுமாக இருந்தார்கள். இக்கொடும் பிடியிலிருந்து விடுபட்டு இறையுணர்வு என்கிற விரிந்த வானில் சுதந்திரமாக சுழன்று சுழன்று பறந்திடும் காலம் எப்போது வருமோ! என ஏங்கித் துடித்தார்கள்,

ஒருநாள் காலை முஸ்லிம்களில் சிலர் ஹபஷா நாட்டுக்குக் குடிபெயர்ந்து சென்று கொண்டிருந்தார்கள் என்ற விஷயத்தை அவர் செவியேற்றார். தன்னுடைய தாயின் கொடிய நிலையை எண்ணிப்பார்த்தார். அவருக்குத் தெரியாது மறைமுகமாக ஒளிந்து அம்முஸ்லிம்களுடன் இணைந்து விட வேண்டுமென்று எண்ணினார். அன்று பகல் பூராவும் தவியாய்த் தவித்து இரவின் இருளை எதிர் பார்த்து ஏங்கியிருந்தார். மாலைக் கதிரவன் மலையினுள் மறைந்தது. இத்தரணியின் மீது இருள் சூழ்ந்து கொண்டது. இவ்விருளை நன்றாகப் பயன்படுத்திக் கொண்ட முஸ்அப் தன் கரங்களைப் பிணைத்துக் கொண்டிருந்த சங்கிலிகளை கொஞ்சம் கொஞ்சமாக உடைத்தெறிந்து விட்டு, அப்பால் தாளிடப்பட்ட கதவையும் தகர்த்து விட்டு வேக வேகமாகச் சென்று ஹபஷா நாட்டுக்குச் சென்று கொண்டிருந்த முஸ்லிம்களோடு இணைந்து விட்டார்.

குவியல் குவியலான செல்வங்களை இழந்து, ஆடம்பர ஆடை அணிகலன்கள் யாவற்றையும் துறந்து அல்லாஹ் ஒருவனையே குறியாகக் கொண்டு துன்பங்கள் பலவற்றை ஏற்று இஸ்லாமிய அணியுடன் இணைந்து விட்ட முஸ்அப்

இப்னு உமைர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை அண்ணல் நபியவர்கள் பாராட்டி அவ்வணியினருக்கே தலைவராக நியமித்தார்கள்.

ஒருநாள் நபிகள் திலகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தம் பள்ளியில் அமர்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களைச் சுற்றிலும் வட்டமிட்டு சஹாபாப் பெருமக்கள் அமர்ந்து கொண்டிருந்தார்கள். அப்போது அங்கு முஸ்அப் இப்னு உமைர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுடைய முகம் ஒளியிழந்திருந்தது. மேனி சுருங்கியிருந்தது, ஆடை அழுக்கடைந்திருந்தது. தலை ரோமம் புழுதிபடிந்து அலங்கோலமாக இருந்தது. இந்நிலையில் அவரை சஹாபாப் பெருமக்கள் பார்த்தபோது இவரா வளமார் முஸ்அப்? என்ன இவரா வளமார் முஸ்அப்! என்று எண்ணி கண்ணீர் உகுத்தார்கள்.

அருளுருவாய் அமைந்த அண்ணல் நபியவர்கள் வறிய நிலையிலுள்ள முஸ்அபைப் பார்த்தவுடன் வேதனையால் விம்மி கண்கலங்கி, ''மக்கமா நகரில் பார்த்த முஸ்அபா இவர்! தேனும் பாலும் பருகி ஆடை அணிகலன்களுடன் ஆரவாரமாக நடப்பவரல்லவா இவர்! ஆயினும் அந்தமுஸ் அப் இப்னு உமைர் அல்லாஹ்வின் அன்பையும் அவன் தூதருடைய அன்பையும் அடைவதற்காக அனைத்து பாக்கியங்களையும் துறந்து விட்டார். வறுமையை மேற்கொண்டார்'' என்று கூறினார்கள்.

முஸ்அப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மார்க்கப் பணிகளில் அளப்பரிய பற்றும் ஆழமான அறிவும் உள்ளவராக இருந்ததினால் அவர்களை அருள் நபியவர்கள் ஹிஜ்ரத் ஏற்படுவதற்கு முன்னர் இஸ்லாமை ஏற்றிருந்த மதீனா முஸ்லிம்களுக்கு மார்க்க அறிவு போதிப்பவராக நியமித்து அனுப்பினார்கள். அவர்கள் தம் அருமையான பண்புகள் மேலாம் நடைமுறைகள், ஒழுக்க நெறிகள் ஆகியவற்றினால்

மதீனாவாசிகளின் உள்ளங்களைக் கவர்ந்தார்கள். அப்படிக் கவரப்பட்ட மதீனா நகர மக்கள் கூட்டம் கூட்டமாக அல்லாஹ்வின் மார்க்கத்தில் புகத் தொடங்கினார்கள்.

அவர்கள் அறிவு, அடக்கமுள்ளவராக இருந்ததைப்போல வீரம் செறிந்தவராகவும் இருந்தார்கள். அவர்களுடைய வீரத்தை எடுத்துரைக்கும் எண்ணிறந்த நிகழ்ச்சிகள் இஸ்லாமிய வரலாற்றில் இடம் பெற்றிருக்கின்றன. அவைகளில் ஒன்று உஹதுப் போர் நிகழ்ச்சியாகும்.

உஹதுப்போர் முஸ்லிம்களுக்கும் காபிர்களுக்குமிடையே நடைபெற்றது. முஸ்லிம்கள் சுமார் 950 பேர் இருந்தனர். காபிர்கள் மூவாயிரத்துக்கும் அதிகமாக இருந்தனர். அவர்களிடம் கூரிய வாள்களும் வாகன வசதிகளும் மிக அதிகமாக இருந்தன. இந்நிலையில் இரு படையினருக்குமிடையே போர் தொடங்கியது. ஹஜ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹத் மலையின் ஒரு பகுதியிலிருந்த மிகக் குறுகலான வழியில் அம்பு எய்யும் வீரர்களை நிறுத்தி, அப்பகுதியின் வழியாக எதிரிகள் வந்து புகா வண்ணம் எச்சரிக்கையுடன் பாதுகாத்து நிற்குமாறு அவர்களுக்குக் கட்டளையிட்டிருந்தார்கள். இருபடையினருக்குமிடையே போர் அதிவேகமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் முஸ்லிம் படையினர் மேலோங்கியிருந்தனர். எதிரிப் படையினர் பலமிழந்து தம் பொருட்களை விட்டு விட்டு பின்வாங்கி ஓடினர். அப்பொருட்களை முஸ்லிம் படையினர் எடுத்துக் கொண்டிருந்தனர் இதைக் கண்ட அம்பு வீரர்கள் நபியவர்களுடைய கட்டளையை மீறி முஸ்லிம் படையினருடன் சேர்ந்து கொண்டு எதிரிகள் விட்ட பொருட்களைப் பொறுக்க முற்பட்டனர்.

இந்த அருமையான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்த வண்ணமிருந்த எதிரிகள் அந்த மலைக் கணவாய் வழியாகப் புகுந்து பின்புறமாக முஸ்லிம் படையினரைத் தாக்கத் தொடங்கினர். கொஞ்சமும் எதிர்பாராத இத்தாக்குதலைக் கண்ட முஸ்லிம் படையினர் அங்கு மிங்குமாகப் சிதறிப் போய்விட்டனர். அப்படிச் சிதறிப் போன படைகளில்

ஒரு பிரிவின் தலைவராக இருந்துகொண்டு இஸ்லாமியகொடி யினைத் தாங்கிய வண்ணம் விரோதிகளுடன் மிகக் கடுமை யாக முஸ்அப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் போரிட் டுக்கொண்டிருந்தார்கள். நேரம் செல்லச்செல்ல எதிரிகளு டைய அணிகள் பெருகிவந்தன. தாம் இழந்துவிட்ட பொருட் கள் யாவற்றையும் மீண்டும் பெற்றுக் கொள்ள வேண்டு மென்ற வைராக்கிய உணர்வுடன் எதிரிகள் கடும் வேகத் துடன் போரிட்டுக் கொண்டிருந்தார்கள்.

போர் மிகவும் உக்கிரமமாக நடந்து கொண்டிருந்தது. சிதறிப்போன முஸ்லிம் படையினை ஒன்றுதிரட்டுவதற்கு முன் னர் எதிரிப்படையினர் முஸ்அப் ரலியல்லாஹு அன்ஹுவை நோக்கி விரைந்து அவர்களைச் சூழ்ந்து கொண்டு தாக்கத் தொடங்கினர். அத்தாக்குதலை முறியடிக்க முழுமையான ஆற்றல் தனக்கில்லா விடினும் தன் கரத்தில் ஒளிர்ந்து கொண்டிருந்த கொடியினைக் காப்பதற்காக முஸ்அப் ரலியல் லாஹு அன்ஹு அவர்கள் தற்காப்பு செய்து கொண்டி ருந்தார்கள். அப்போது எதிரணியில் ஒருவன் அதிவேகமாகப் பாய்ந்து முஸ்அப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய வலக்கரத்தின் மீது வெட்டினான். உடனே முஸ்அப் ரலி யல்லாஹு அன்ஹு அவர்கள் கொடி கீழே விழாமல் அதனைத் தனது இடது கரத்தால் பற்றிக் கொண்டார்கள். இதைக் கவனித்துக் கொண்டிருந்த வேறொரு மனிதன் அவ ரது இடது கரத்தின் மீதும் வெட்டினான். அவர்களுக்கு அளப்பெரிய வேதனை ஏற்பட்டது. தாங்க வொண்ணாத இவ்வேதனையைத் தாங்கிக் கொண்டு மிகுந்த பிரயாசை யோடு அக்கொடியினைத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டு கீழே விழுந்து விடுகிறார்கள். உதிரம் அதிகம் வெளிப்பட்டதினால் அவர்களால் எழுந்திருக்க முடியவில்லை. அவர்களுடைய உறுப்புகள் சோர்ந்து விட்டன. ஆயினும் அவருடைய உள்ளம் இறை நம்பிக்கையால் எரிந்து கொண் டிருந்தது. உயிரினும் மேலாகக் காப்பாற்றி வந்த அவர்களு டைய கொடி கீழே விழுந்து விட்டது, அவர்களுடைய உள் ளம் வேதனையால் விம்முகிறது. அவரது கரத்தில் வெட்டு

விழுகின்ற போதெல்லாம் அவர்களுடைய திருவாயிலிருந்து, ''நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வினுடைய தூதராகவே தவிர வேறெதுவுமாக இல்லை. அவர்களுக்கு முன் பல இறைத்தூதர்கள் காலஞ் சென்று விட்டனர்.'' என்ற இறைவசனம் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. தெய்வீக ஒளி நிரம்பிய அவர்களுடைய முகம் மரணமென்னும் இருளில் மங்கிக் கொண்டிருந்தது, உடலுறுப்புக்கள் ஒடுங்கி விட்டன. கண்கள் மூடிவிட்டன. அவர்களுடைய உயிர் முற்றாய்ப் பிரிந்து விட்டது. அல்லாஹ்வின் தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களின் அருள் மொழியில் கட்டுண்டு அவர்களுக்காக தம்மை அர்ப்பணித்துக் கொண்ட முஸ்அப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஆன்மா இறை சன்னிதானம் சென்று விட்டது, அவர்களுடைய உடல் அடையாளம் காண முடியாத அளவுக்கு காயங்களினால் நிரம்பியிருந்தது.

பேரிரைச்சலுடன் நடைபெற்ற உஹதுப் போர் முடிவடைந்து விட்டது. எங்கும் ஒரே அமைதி நிலவியது. உஹது மணல்கள் செங்குருதியால் சிவந்து கிடந்தன. மனித உடல்கள் சிதறிக் கிடந்தன, இரு படையினர்களிடையேயும் மகிழ்ச்சி காணப்படவில்லை. கருணை நபியவர்கள் தம்முடன் போரிட்டு மடிந்த உத்தமர்களைத் தேடிக்கொண்டு வருகிறார்கள். எதிரில் ஓர் உடலைக் கண்டு நின்று உற்று நோக்குகிறார்கள். மீண்டும் நோக்குகிறார்கள். அவர்களுடைய கண்களிலிருந்து நீர்த் திவலைகள் வழிந்து கொண்டிருந்தன. தியாகத்தின் உருவாய் அமைந்த முஸ்அப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய உடல்தான் அது. அந்த உடல், கரங்கள் வெட்டப்பட்டு நெஞ்சத்தில் கொடி பிணைந்து இரத்தப் பெருக்கில் மிதந்து கிடந்தது. இதனைக் கண்ட கருணை நபியவர்களின் கண்களில் அருவி போல நீர்பெருகி ஓடியது. மிகுந்த வேதனையோடு,

''இப்படிப்பட்ட மனிதர்களும் இறைநம்பிக்கையுள்ளவர்களில் இருக்கின்றனர். அவர்கள் தம்இறைவனுக்குச் செய்து

கொடுத்த உடன்படிக்கையை உண்மையாகவே நிறைவு செய்து விட்டனர்''.

என்ற வசனத்தை ஓதினார்கள். அப்படி ஓதிவிட்டு முஸ்அப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைப் பொதிருந்த ஆடையைக் கவனித்தார்கள், அது கிழிந்திருந்தது. அவர்களுடைய உடலை முழுமையாக போர்த்திக் கொள்ள முடியாத அளவுக்கு சிறிதாக இருந்தது. அதனைக் கொண்டு தலையை மூடினால் கால் வெளிப்படுகிறது, காலை மூடினால் தலை வெளிப்படுகிறது. இந்நிலை கண்ட கருணை நபியவர்கள் கண் கலங்கி,

''ஏ முஸ்அத்! நீ தானா முஸ்அப்!! மக்காவில் மிக மென்மை(யான அழகிய ஆடைஅணிந்து பவனி வந்து)கொண்டிருந்தாயே அந்த முஸ்அப் நீ தானா? உம்முடைய உடலை முழுமையாக போர்த்திக் கொள்ளக்கூட துணி இல்லை. இப்படிப்பட்ட முஸ்அபையா நான் பார்க்கிறேன். உண்மையிலேயே நீர் உமது இறைவனுக்குச் செய்து கொடுத்த உடன்படிக்கையை நிறைவு செய்து விட்டீர்'' என்று ஏந்தல் நபியவர்கள் கூறிவிட்டு முஸ்அப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடன் உயிர் தியாகம் புரிந்த உத்தமர்களின் உடல்களைப் பார்த்தவாறு,

''நீங்கள் அனைவரும் அல்லாஹ்வுக்காக உயிர்த் தியாகம் புரிந்திருக்கிறீர்கள். திண்ணமாக அதற்கு நான் சாட்சியாக இருக்கிறேன்'' என்று உறுதியாக உரைத்தார்கள்.

அல்லாஹ்வின் அன்பையும் அவன் தூதருடைய அன்பையும் பெறுவதற்காக தனக்கிருந்த பாக்கியம் அனைத்தையும் துறந்து உயிரையும் இழந்து விட்ட முஸ்அப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அனைத்து மக்களுக்கும் அரும் தியாக வழியில் முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள்.

4. அறிஞர் திலகம் அப்துல்லாஹ் இப்னு மஸ்வூது ரலியல்லாஹு அன்ஹு

காட்டாற்று வெள்ளமென வள்ளல் நபியவர்களுக்கு எதிர்ப்புகள் பெருகி வந்தன. அப்படிப் பெருகிவந்த எதிர்ப்புகளுக்கிடையே அவர்களைக் கொண்டு ஈமான் கொண்டிருக்கிற நம்பிக்கையாளர்களும் பெருகி வந்தனர், அப்படிப் பட்ட நம்பிக்கையாளர்களில் நான்கு பேர் இறையொளி சிந்துகின்ற புனித கஃபாவைச் சுற்றிலும் இருக்கின்ற மஸ்ஜிதுல் ஹராமின் ஒருபகுதியில் அமர்ந்து கொண்டு பொருள் வளம் செறிந்த வான்மறை அல்குர்ஆனைக் குறித்து உரையாடிக் கொண்டிருந்தனர்.

ஒருவர், அதோ புனித கஃபா! அதனருகில் உள்ள மகாமே இப்ராஹீமில் நின்று கொண்டு எழிலார்ந்த வான் மறையை இனிய குரலில் இரைந்து ஓதுபவர் யார்? எனக் கேட்டார். நான் ஓதுகிறேன் என மற்றொருவர் கூறினார். நீர் ஓதவேண்டாம், உம்மை அவர்கள் அடித்துத் துன்புறுத்தினால் அவர்களைத் தட்டிக்கேட்க தண்டனை வழங்க உமக்கு உறவினர்கள் எவரும் இல்லை. எனவே நீர் ஓத வேண்டாம் என்று மூன்றாமவர் கூறினார். இல்லை, நானே ஓதுகிறேன் அல்லாஹ் எனக்கு உதவி செய்வான் என்று கூறிக்கொண்டு கஃபாவை நோக்கி வேகமாக அவ்வாலிபர் ஓடினார். வேண்டாம் வேண்டாம் என அவர்கள் அனைவரும் தடுத்தார்கள். அதனை அவ்வாலிபர் கொஞ்சமும் பொருட்படுத்தாமல் விரைந்து சென்று மகாமே இப்ராஹீமில் போய் நின்று கொண்டு சுற்றிலும் தன்னுடைய பார்வையைச் செலுத்தினார்; அங்கே எதிர்ப்புறத்தில் குரைஷித் தலைவர்கள் பேசிக்கொண்டிருந்தனர். அவர்களுடைய கவனத்தை ஈர்க்கும் பொருட்டு ''அர்ரஹ்மான் அல்லமல் குர் ஆன்'' என்று தொடங்குகிற அத்தியாயத்தை இனிய குர

வில் இரைந்து ஓதினார். பொருட்செறிவு, இறை உண்மை, இயற்கைப் பொருட்களில் மறைந்து கிடக்கின்ற தத்துவங்கள் நிரம்பிய அர்ரஹ்மான் என்ற அத்தியாயத்தை நிறுத்தி நிறுத்தி அழகாக ஓதினார்.

அது என்ன குரல்? முஹம்மது அவர்களுக்கு இறக்கப் பெற்ற வேத வசனங்களின் குரலாக இருக்கிறதே! அவ் வசனங்களை ஓதுபவர் யார்? என்று தமக்கிடையே அக் குறைஷித் தலைவர்கள் பேசிக்கொண்டே மகாமே இப்ரா ஹீமுக்குவந்தனர். அவர்களுக்கு முற்றிலும் எதிரான வான்மறையை ஓதிக்கொண்டிருந்த அவ்வாலிபரை அவர்கள் தாக்கத்தொடங்கினர். ஒருவர் முகத்தில் அடித்தார். இன் னொருவர் முதுகில் ஒருவராக மாறி மாறி அவரை அடித்துத் துன்புறுத்திக் கீழே தள்ளி மயக்கமுறும்படிச் செய்தனர். சிறிது நேரம் மயங்கிய நிலையிலிருந்த அவ்வாலிபர் தெளிவடைந்து தன் நண்பர்களை நோக்கி தள்ளாடித் தள்ளாடி நடந்து வந் தார். அவருடைய முகத்திலும் முதுகிலும் வயிற்றிலும் உதி ரம் கசிந்து கொண்டிருந்தது. இந்நிலையில் அவரைக்கண்ட நண்பர்கள் அளப்பெரிய வேதனையுற்று, இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டுவிடுமே என அஞ்சித்தான் உம்மை ஓதவேண் டாம் என்று கூறினோம், எங்களுடைய கூற்றினை செவி மடுக்காமல் இவ்வளவு பெரியதுன்பத்திற்கு உள்ளாகி விட் டீரே என தங்களுடைய வேதனையைப் புலப்படுத்தினர்.

அதற்கு அவ்வாலிபர், ''அவர்களின் உண்மை நிலை யையும் இறைமறையின் உண்மையான வலிமையையும் இப்பொழுதுதான் நான் அறிந்து கொண்டேன். இறை மறையின் உண்மையான வலிவுக்கு முன்னால் அவர்களு டைய வலிவு மிக மிக அற்பமானது. எனவே இறைமறையை அருளொளிரும் கஃபாவுக்கு முன்னால் இனிய குரலில் ஒவ் வொரு நாளும் இரைந்து ஓதுவேன். என்னைத்தடுப்பதற்கு இனி எதுவுமில்லை'' என ஆர்வம் பொங்கக் கூறினார், அப்படிக்கூறியவர்யார்? அவர்தான் இப்னு மஸ்ஊது என்று அன்பாக அழைக்கப்பட்ட அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது

ரலியல்லாஹு அன்ஹு அவர்களாகும். அவர் இறை ஞானம் பெற்றவர். மார்க்க விற்பன்னர். இனிமையான குர லுக்குச் சொந்தக்காரர், அவரின் இனிமையான குரலைக் கேட்க ஸஹாபாப் பெருமக்கள் மிகவும் விரும்பினர்.

நபிகள் திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் தெய்வீக நாதம் இழையும் இறைமறையின் இன்குர லைக்கேட்க நாடி விட்டார்களாயின் அப்போது அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது ரலியல்லாஹு அன்ஹு அவர்களை அழைத்து, அப்துல்லாஹ்! இறைமறையை எனக்கு ஓதிக் காட்டுவீராக! என்று கூறுவார்கள். அதற்கு, அல்லாஹ்வின் தூதரே! அந்த குர்ஆன் உங்கள் மீதல்லவா இறக்கப்பெற் றிருக்கிறது! நான் எப்படி உங்கள் மீது ஓதிக்காட்டுவது?'' என்று அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊதுரலியல்லாஹு அன்ஹு கேட்டார்கள். அதற்கு அண்ணல் நபியவர்கள் குர்ஆனின் இன் குரலை கேட்க நான் விரும்புகிறேன் என பதிலுரைத் தார்கள். இதனைக் கேட்ட அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் 'அன்னிஸா' என்ற அத் தியாயத்தின் சில வசனங்களை தமக்கே உரிய இன் குரலெ னும் தேனமுதில் குழைத்து தெய்வீக நாதம் பொங்கியெழும் வகையில் ஓதினார்கள்; ஓதிக் கொண்டேயிருந்தார்கள்.

கடைசியாக, ''மறுமை நாளின் போது ஒவ்வொரு சமு கத்தவரின் மீதும் சாட்சி கூறுகிறவரைக் கொண்டு வந்து அப்பால் உம் கூட்டத்தவரின் மீது சாட்சி கூற உம்மையும் கொண்டு வந்து விடும் போது நிலைமை எப்படி இருக்கும் என எண்ணிப் பாரும்'' என்ற இறைவசனத்தை வந்தடை யும் போது வள்ளல் நபியவர்கள் போதும் போதும் அப்துல் லாஹ்வே! இதை நிறுத்தி விடுங்கள் எனக்கூறினார்கள். அவர்களுடைய கண்களிலிருந்து நீர் அருவியென பொங்கி வழிந்தது, உடனே ஓதுவதை நிறுத்தி விட்டார்கள்.

இப்படி பக்தி சொட்ட இனிமையாக ஓதிடும் அப்துல் லாஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வான் மறையில்

அளப்பெரிய ஞானம் பெற்றிருந்தார்கள். எந்த வசனம் எங்கு எப்போது என்ன பொருளில் இறங்கியது என்பதையெல்லாம் மிகத்தெளிவாக விளங்கியிருந்தார்கள். இது குறித்து அவர்கள் 'வான்மறையிலிருந்து இறங்கியஒவ்வொருவசனத்தையும் நான் நன்கு அறிந்திருந்தேன். அது எங்கு எப்போது என்ன பொருளில் இறங்கியது என்பதையும் மிகத் தெளிவாக அறிந்திருந்தேன். என்னைவிட எழில் மறையில் அதிகம் தெரிந்தவர் எவரும் இல்லை'' என்று கூறினார்கள். இப்படி அவர்கள் கூறியது பெருமையின் அடிப்படையில் அல்ல. அவர்களுக்கு அல்லாஹ் வழங்கிய பேருபகாரத்தை எடுத்துரைக்கும் வகையிலாகும்!

நபிகள் திலகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை முதன் முதலாகச் சந்தித்த விதம் குறித்து அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கின்றார்கள்:— அந்தச் சம்பவம் என் நினைவில் பசுமையாகப் பதிந்திருந்தது. அதனை எண்ணும் போதெல்லாம் பேரின்பம் என் உள்ளத்தில் பொங்கி எழுந்தது! நான் பருவமடையாச் சிறுவனாக இருந்தேன். மக்கா நகரிலுள்ள தனவந்தர்களின் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தேன்.

ஒரு சமயம் உக்பத்துப்னுமுயீத் என்பவருடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது வெகுதூரத்திலிருந்து இரு மனிதர்கள் வந்து கொண்டிருந்தார்கள். ஒருவர் பேரழகு மிக்கவராக இருந்தார். அவர் கண்கள் தெய்வீகப் பேரொளியை வீசிக்கொண்டிருந்தன, இம்மாமனிதரைப் போன்று இதற்கு முன்னரும் நான் பார்த்ததில்லை. இதற்குப் பின்னரும் பார்க்கவில்லை, இம்மாமனிதர் என்னருகே வந்த போது இனங்காணா பக்தி என் அகத்தில் அரும்பியது.

அவர்கள் இருவரும் என் பக்கமாக நெருங்கி வந்து என்னைச் சுற்றி நின்று கொண்டிருந்த ஆடுகளைப் பார்த்து விட்டு, இவ்வாடுகளிலிருந்து பால் கரந்து தருகிறாயா?என்று

கேட்டார்கள். 'அவைகளை மேய்க்கும் ஏழைச் சிறுவனே நான். இவைகள் உக்பா என்ற சீமானுக்குச் சொந்த மானவை; அவன் அனுமதி பெறாமல் நான் எப்படி பால் கரந்து தருவேன்'' என்று கூறினேன், அதற்கவர்கள் ''அவ் வாடுகளில் ஆண் ஆடு கூடிக் கருவுறாத சிறிய ஆடுகள் ஏது மிருக்கிறதா?'' எனக்கேட்டார்கள். அதோ நீங்கள் சொல்லிய ஆடு அங்கு நிற்கிறது பாருங்கள்! அதனைக் கொண்டு வரட் டுமா?'' என்று நான் கேட்டேன், கொண்டுவா என அவர் கள் கூறினார்கள். உடனே அந்தசிறிய ஆட்டைக் கொண்டு வந்து அவர்கள் முன் நிறுத்தினேன். அவர்கள் அவ்வாட் டின் மடியை ஆழ்ந்து கவனித்தார்கள். அது மேனியோடு ஒட்டியிருந்தது. அம்மடியை தம் கரத்தால் தொட்டுத்தடவி அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்தார்கள். என்ன அற்புதம்! என்ன அதிசயம்! அம்மடியிலிருந்து பால் சுரந்தது, உடனே அவர்களுடன் வந்தவர் கூஜா ஒன்றில் பாலை நிரப்பினார். அதனை அவரும் பருகினார்; நானும் பருகினேன். பிறகு அம் மகானுபவர் அம்மடியைத் தொட்டு நின்றுவிடு எனக் கூறினார். மறுகணம் பால் நின்று விட்டது.

இவ்வதிசயத்தை எண்ணி எண்ணி வியந்தேன். அற்புத மாகச் சுரந்த அப்பாலின் இனிமை என் இருதயத்தை புள காங்கிதம் அடையச் செய்தது. அது பாலா அல்லது தெய் வீகப் பேரமுதா? என்னவென்றுரைக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்தேன். அவர்கள் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்தேன்; பரவசமடைந்தேன். விளக்கம் பெற வேண்டுமென்ற பேராவலால் உந்தப்பட்டு வேகமாக அவர் கள் அருகே சென்று இவ்விசயத்தைக் குறித்து விளக்கம் தாருங்கள் என்று கேட்டேன். என் ஆவலையும் ஆர்வத்தை யும் பார்த்த அவர்கள் ''திண்ணமாக அளப் பெரும் அறிவு ஞானத்தை அல்லாஹ் உனக்குக் கற்றுவைப்பான்'' என்று கூறிச் சென்றுவிட்டார்கள்.

இவ்வருள் வாக்கைப்பெற்ற நான் ஆனந்த முற்று இன் பப் பொய்கையில் மூழ்கினேன். யார் அவர்? யார் அவர்?

என்றறிய ஆவலுற்றேன். சிறிய ஆட்டிலிருந்து பாலமுதைச் சுரக்கச்செய்த அவர்தான் அனைத்துலக மக்களின் உள்ளங்களிலிருந்து தெய்வீகப் பேரமுதைச் சுரக்கச் செய்தார். ஏகத்துவப் பேருண்மையை பாருலகமெங்கும் பரப்பினார். அம்மகானுபவர்தான் அனைத்துலகப் பேரொளியாம் முஹம்மதெங்கள் நபிகள் கோமான் ஆகும் என்று நான் அறிந்த போது என் உள்ளம் அவர்கள்பால் ஈர்க்கப்பட்டு இறை உண்மையை ஏற்று அவன் முன் பணிந்தது.

உக்பத்துப்னு முயீத் என்பவருடைய ஆடுகளை மேய்க்கும் ஏழைக்கூலியாக இருந்த நான் இன்று கூபா நகரின் ஆளுநர் பதவியை ஏற்கிறேன். அது காலை 'அல்லாஹ் உனக்கு அறிவு ஞானத்தைக் கற்றுவைப்பான்' என்ற ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அருள்வாக்கு என் நினைவுக்கு வந்தது. என் உள்ளம் இன்பக்களிப்பில் மூழ்கியது. ஆம் பூமான் நபியின் பொன்வாக்கு என்னை அறிஞராக்கியது. வான்மறையின் வியாக்கியான வல்லுனராக்கியது என்று கூறிவிட்டு தமக்கு வாழ்த்துரை வழங்கவந்த மக்களை நோக்கி, ''அல்லாஹ் ஒருவனே; அவனைத்தவிர வேறு நாயனே இல்லை. மாநபியின் மணிமொழிகளை நான் பெற்றிருக்கின்றேன்; அதனையே உங்களுக்குச் சொல்கிறேன். அதனை நீங்கள் பின்பற்றி நடங்கள்'' என்று அறிவுரை வழங்கினார்கள்.

ஒரு பெண்ணுக்குத் திருமணம் நடந்த பொழுது மஹர் நிர்ணயிக்கப் படவில்லை. இந்நிலையில் அவளுடைய கணவர் இறந்து விட்டார். அவளுக்கு எவ்வளவு மஹர் கொடுப்பது என்ற விஷயத்தில் ஸஹாபாக்களுக்கிடையே பலத்த சர்ச்சை ஏற்பட்டு விட்டது. அவர்களுக்கிடையே எம்முடிவும் ஏற்படாத காரணத்தால் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது (ரலி) அவர்களிடம் வந்து தீர்ப்பு கேட்டார்கள். அதற்கவர்கள் இம்மஸ்-அலாவில் இறைத்தூதர் அவர்கள் என்ன தீர்ப்பு வழங்கினார்கள் என்பதைதானறியேன். அவகாசம் அளியுங்கள். நான் ஆழமாக ஆராய்ந்து தீர்ப்பு வழங்குகிறேன் என்று கூறிவிட்டார்கள்.

நாட்கள் பல கடந்தன. வாரங்கள் பல உருண்டோடின ஸஹாபாக்கள் மன நிறைவு பெறாமல் குழம்பி மீண்டும் இப்னு மஸ்ஊது ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் கேட்கத் தொடங்கினார்கள், அதுவரை அவர்களுக்கு மாநபி யின் மணிமொழி கிடைக்கப் பெற வில்லை. எனவே மிக வும் தயங்கி அடியிற்கண்ட தீர்ப்பைக் கூறினார்கள்.

அஃது, ''திருமணத்தின் போது மஹர் நிர்ணயிக்கப்படா திருக்கும் நிலையில் கணவன் இறந்து விட்டால் மனைவிக்கு 'மஹ்ருல் மிஸ்ல்' உண்டு. அதாவது அப்பெண்ணின் சகோ தரிகள் இவர்களுக்கு எவ்வளவு மஹர் கொடுத்திருக்கிறார் களோ அதே மஹரை இப்பெண்ணுக்கும் கொடுக்க வேண் டும். அவர்களுடைய கணவனின் சொத்திலிருந்தும் அவளுக்கு பங்குண்டு. அவள்மீது இத்தாவும் கடமையாகும்.''

இத்தீர்ப்பைக் கூறி முடித்ததும் மஃகல் இப்னுயஸார் ரலி யல்லாஹு அன்ஹு அவர்கள் அங்கு வேகமாக வந்தார் கள். அப்துல்லாஹ் இப்னு மஸ் ஊது ரலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி நீங்கள் வழங்கிய தீர்ப்பைப்போன்றே நபி கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது காலத்துப் பெண் ஒருத்திக்குத் தீர்ப்பு வழங்கியிருக்கிறார் கள் என்று கூறினார்கள். இதைக்கேட்ட அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், நீர் கூறுவது உண்மைதானா? எனக்கேட்டார்கள். ஆம் உண்மையே! என மஃகல் இப்னுயஸார் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறுதியிட்டு உறுதி கூறினார்கள். அப்போது அப்துல் லாஹ் இப்னு மஸ் ஊத் (ரலி) அவர்கள் அளப்பரிய ஆனந் தம் அடைந்தார்கள்.

''இந்த அறிவுக்கடல் இருக்கின்றபோது வேறெவரிடமும் எதனையும் நீங்கள் கேட்க வேண்டாம்'' என அப்துல்லாஹ் இப்னு மஸ் ஊது ரலியல்லாஹு அன்ஹு அவர்களைச் சுட் டிக்காட்டி அபூமூஸல் அஷ்அரிய்யி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள். 'அறிவு, அன்பு, அருங்குணம்,

இறையச்சம், பயபக்தி, நட்பு, ஆகிய மேலான பண்புகளில் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தலை சிறந்து விளங்கினார்கள்'' என்ற மக்களின் புகழாரத்தை அமீருல் முஃமினீன் அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் உறுதிப்படுத்தினார்கள்.

அப்துல்லாஹிப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் மிகவும் வியாதியில் பீடிக்கப்பட்டு வேதனையால் விம்மிப் படுக்கையிலிருந்த சமயம் ஹஜ்ரத் கலீபா உதுமான் இப்னு அப்பான் (ரலி) அவர்கள் நோய் நலம் விசாரிக்கச் சென்றார்கள். இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்களிடம் நோய் நலம் விசாரித்து விட்டுக் கலீபா உதுமான் அவர்கள் புறப்படும் சமயம் ஹஜ்ரத் இப்னு மஸ்ஊதிடம் ''தாங்கள் எதையேனும் விரும்புகிறீர்களா? எனக் கேட்டார்கள். என் இறைவனின் ரஹ்மத்தான அருளையே விரும்புகிறேன் என்று ஹஜ்ரத் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள். தாங்கள் எதையாவது முறையிடுகின்றீர்களா? என்று கலீபா உதுமான் (ரலி) அவர்கள் கேட்டார்கள். எனது பாவங்களைக் குறித்து இறைவனிடம் முறையிடுகிறேன் என்று பதில் தந்தார்கள். மருத்துவரொருவரை அனுப்பி வைக்கட்டுமா? எனக் கலீபா அவர்கள் மீண்டும் வினவினார்கள். அந்த மருத்துவன் தான் நான் நோய் வாய்ப்படச் செய்துள்ளான் தேவையில்லை என்று இப்னு மஸ்ஊத் அவர்கள் அதனை மறுத்துப்பதிலளித்தனர். தங்களுக்குச் சிறிதளவு பைத்துல் மால் நிதியிலிருந்து அன்பளிப்புகள் கொடுத்து அனுப்புகிறேன் என்று கலீபா உதுமான் அவர்கள் கூறவும் தேவையில்லை; நன்றாகவே உள்ளேன் எனப்பதில் தந்தனர். தங்களின் பெண் மக்களுக்காவது உதவட்டுமே என்று கலீபா உதுமான் (ரலி) அவர்கள் விடாது அனுதாபத்துடன் மீண்டும் கேட்டபொழுது ஹஜ்ரத் இப்னு மஸ்ஊத் (ரலி) சிறிது கோபமடைந்து கலீபா அவர்களே! அமீருல் முஃமினீன் அவர்களே!! வறுமையில் என் பெண் குழந்தைகள் வாடி விடலாம் என்று அஞ்சுகிறீர்களா? ஒவ்வொரு இரவிலும் தினசரி சூரத்துல்

வாக்கிஆவை மஃரிபுக்குப் பின் ஓதி வரும்படி எனது குழந்தைகளிடம் ஏவியுள்ளேன். ஏனென்றால் பிரதி தினம் ஒவ்வொரு இரவிலும் ''சூரத்துல் வாக்கிஆ'' ஓதி வருபவர்கள் ஒருபோதும் வறுமையால் வாட மாட்டார்கள் என்று நம் அருமை நபி மணி (ஸல்) அவர்கள் அழகுற அருளியதை நான் கேட்டிருக்கிறேன் என்று ஹழ்ரத் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் ஆக்ரோஷத்துடன் பதிலளித்து அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது தனக்கிருந்த ஆழிய அன்பினையும், அவர்கள் பொன்மொழி நன்மொழியாகும் என்பதனையும் உணர்த்தினார்கள். இப்படிப்பட்ட உயர்தர சம்பவங்கள் பல உத்தமத் தோழர்களின் வாழ்வினில் கண்டிடலாம். பயபக்தியின் பண்பட்ட நிலையும், இறையச்ச இன்ப வாழ்வும், வழங்கிடும் அற்புதம் எத்தகையது? என்பதை இதன் மூலம்' நாம் நன்கு தெரிந்து கொள்ளலாம். ஆகையால்,

சங்கைக்குரியவர்களே!

சர்தார் நபி சமூகத்தவர்களே!!

அல்லாஹ்வின் அருள் மறை வழங்கும் அழகிய இஸ்லாமிய வாழ்க்கையையும், அண்ணால் நபி (ஸல்) அவர்கள் அருளிய ஆன்மீக நெறிமுறைகளையும், பின்பற்றி பேரும் புகழும், மங்காத-மறையாத நன்மணிகளாய்-நன் மக்களாய் மாறி வாழ்ந்திட முயன்றிடுங்கள்.

எங்கும் நிறைந்தவனே!
ஏகமாய்த் துலங்குபவனே!!
ரஹ்மானானவனே!
ரப்புல் ஆலமீனே!
அல்லாஹ்வே.

கள்ளமில்லா உள்ளம் உள்ளவர்களாகவும், அறிவால் நிரம்பியவர்களாகவும் எம்மை ஆக்கி அருள்வாயாக!

★★★

5. சான்றோர் திலகம் ஸஅது இப்னு அபீவகாஸ் ரலியல்லாஹு அன்ஹு

"எறியுங்கள் யாஸஅது! உங்கள் அம்பை எறியுங்கள்! என் தாயும் தந்தையும் உங்களுக்கு அர்ப்பணமாகட்டும்!"

இப்படி இறைத்தூதர் அண்ணல் நபி அவர்கள் சான்றோர் திலகம் ஸஅது இப்னு அபீவகாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை விளித்து அன்புக் கட்டளையிட்டார்கள். எப்படிப்பட்ட சூழ்நிலையில் இப்படிக் கட்டளையிட்டார்கள்? அறியத்துடிக்கிறீர்கள். பேரார்வம் கொள்கிறீர்கள். உங்கள் ஆர்வத்தை நான் அறிகிறேன். அக்கட்டளையின் உள்ளே உள்ளங்களை நெகிழவைக்கும் அற்புதமான வரலாறு ஒன்று மறைந்திருக்கிறது. அதனை நான் வெளிப் படுத்திவைக்கிறேன்.

ஹிஜ்ரீ மூன்றாம் ஆண்டு உஹதுப்போர் நடைபெற்றது. அப்போர் இஸ்லாமிய வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது. அப்போரில் எதிரிப்படையினர் மூவாயிரம் பேர் கலந்து கொண்டனர். அவர்கள் போர்ப்பயிற்சியும் திறனும் பெற்றவர்கள். அதிக அனுபவமும் பெற்றவர்கள். குவியல் குவியலான ஆயுதங்களும் குதிரைகளும் அவர்களிடம் இருந்தன. சோர்வடையும் ஆடவர்கட்கு செறிவும் வீரமும் ஊட்டும் கவிபாடும் பெண்களும் இருந்தனர். இத்துணை பெரிய அளவில் போர்ப்பரணி பாடி வருகின்ற அவர்களின் நோக்கம் என்ன?

பத்ருப்போரில் தாம் இழந்துவிட்ட சொந்தக்காரர்களுக்காகப் பழிவாங்கும் பொருட்டும் முஸ்லிம்களை ஒழித்துக்கட்டும் பொருட்டும் அவ்வெதிரிப்படையினர் மக்காவிலிருந்து போர்ப்பரணி பாடியவாறு கடல் அலையென ஆர்ப்பரித்துக் கொண்டு நூற்றுக் கணக்கான மைல்களைக் கடந்து மதீனா

வுக்கு மூன்றே மைல் பக்கத்திலுள்ள உஹது என்ற இடத்திற்கு வந்திறங்கினர். அங்கு அவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்கள் மதீனா நகரை உலுக்கி விட்டன.

ஏக அல்லாஹ்வை ஏற்று அமைதியுடன் வாழ்ந்து கொண்டிருக்கிற முஸ்லிம்களை அடியோடு அழித்துவிட வேண்டும் என்ற கொடிய எண்ணத்துடன் மக்கத்துக் குரைஷியினர் தம் வாயிலருகே வந்திருப்பதைக் கண்ணுற்ற கருணை நபியவர்கள் கலங்கிவிடவில்லை.

கருத்துடன் தம் நேயர்களை அழைத்து வெகு நேரம் ஆலோசித்தார்கள். நிலைமைகளை ஆராய்ந்து விளக்கினார்கள். முடிவில் நாம் ஏற்றிருக்கிற உயிரினும் மேலான இனிய இஸ்லாத்தையும் நம்மிளங்குழந்தைகளையும், பெண்களையும் காப்பாற்றும் பொருட்டு உஹது சென்று எதிரிப்படையினருடன் போரிட வேண்டும் என்ற முடிவுக்கு வந்து அம்முடிவை மதீனா நகரெங்கும் அறிவிக்கச் செய்தார்கள்.

அவ்வறிவிப்பை பெற்ற நகர மக்கள் மாநபியின் பள்ளிக்கு அணி அணியாக வந்து குவிந்தனர். தங்கள் மீது பேராபாயம் வந்திறங்கியிருக்கிறது என்பதை நன்கு அறிந்து கொண்ட அவர்கள் போருக்கு ஆயத்தமானார்கள். தங்களிடமிருந்த சின்னஞ்சிறு ஆயுதங்களையும் சேகரம் செய்து கொண்டார்கள். அதே நேரத்தில் அப்துல்லாஹ் இப்னு உபை இப்னு ஸலூல் என்ற நயவஞ்சகன் முஸ்லிம்களோடு நாங்களும் போர் புரிகிறோம் என்று பறை சாற்றிவிட்டு அப்பால் தன்னைச் சார்ந்த முன்னூறு நபர்களை அழைத்துக் கொண்டு வீடு திரும்பி விட்டான். இதனால் முஸ்லிம்கள் கோழையாகி விடுவார்கள் என்ற எண்ணம் அவன் மனதில் மேலோங்கியிருந்தது.

ஆனால் இறை நம்பிக்கையில் எஃகு உள்ளம் கொண்ட முஸ்லிம்கள் கொஞ்சமும் சலனமடையவில்லை. மேலும் மேலும் நெஞ்சுறுதி பெற்றார்கள். எழிலார்ந்த ஏந்தல் நபி

யவர்களின் அருள் முகத்தில் விளையாடிக் கொண்டிருந்த வீரத்தைக் கண்ணுற்ற எழுநூறு முஸ்லிம்படையினர் நபியவர்களைப் பின்தொடர்ந்து உஹது சென்றடைந்தார்கள். முஸ்லிம் படையினரிடமிருந்த சின்னஞ்சிறு ஆயுதங்களைக் கண்டு எதிரிப்படையினர் ஏளனம் செய்தார்கள். இவர்களா எங்களிடத்தில் போராடப் போகின்றார்கள் என்று எக்காளமிட்டனர். இவர்களின் எக்காளம் எதனையும் கண்டு கொள்ளாத முஸ்லிம்கள் முழுமையாக அல்லாஹ்வை நம்பி தம் படையினரைப் போருக்கு தயார் நிலையில் ஆக்கினார்கள். போர் மேகம் அவர்களைச் சூழ்ந்தது. அக்கரிய கார்மேகத்தினிடையே ஒளிபொருந்திய நபியவர்கள் தம்படையினருக்கு உத்திரவிடத் தொடங்கினார்கள்.

ஆரம்பத்தில் ஒருவருக்கொருவர் தனித்தனியே போரிட்டனர். நேரம் செல்லச் செல்ல இரு படையினரும் கூட்டாகப் போராடினார்கள். கொஞ்சம் கொஞ்சமாகப் போர் வலுவடைந்தது. வாட்கள் உராய்ந்தன. அம்புகளும் ஈட்டிகளும் சரமாரியாகப் பாய்ந்தன. இரு படையினருடைய குரல்களும் உயர்ந்தன 'லாத்' 'உஸ்ஸா' என்ற தம் கடவுள்களின் பெயர்களைக் கூறி எதிரிப்படையினர் குரலெழுப்பினர். 'அமித்'-மரணமடையச்செய் என்று கொஞ்சமும் மரணத்திற்கஞ்சாது உன் வழியில் எங்களை மரணமடையச்செய் என்றே முஸ்லிம்கள் குரலெழுப்பிக் கொண்டிருந்தனர். குரல்களும் மோதின. வாட்களும் மோதின. கொள்கைகளும் மோதின. அல்லாஹ்வை நம்பி உயிரைப் பொருட்படுத்தாமல் கடும் வேகத்துடன் முஸ்லிம் படையினர் எதிரிப் படையினருடைய அணிகளில் புகுந்து அவ்வணிகளைச் சிதறடித்தனர். எதிரிகள் அங்குமிங்கும் சிதறி ஓடினர். தோல்வியின் கொடிய வேதனையை ருசித்துக் கொண்டே ஓடினர். ஓடிய அவர்கள் உஹது மலையின் பின் பக்கம் வந்தனர்.

முஸ்லிம் படையினர் எதிரிகள் விட்டுச் சென்ற பொருட்களைத் தேடி எடுப்பதில் முனைந்தனர். உஹது மலையின் குறுகலான கணவாய் ஒன்றின் வழியாக எதிரிகள் வராமல்

தடுப்பதற்காக முன்னெச்சரிக்கையோடு அக்கணவாயில் நிறுத்தி வைக்கப்பட்ட பாதுகாப்புப்படையினர் தமது முக்கிய பணியை விட்டுவிட்டு எதிரிகள் விட்டுச்சென்ற பொருட்களை பொறுக்குவதற்காகக் களம் வந்து விட்டனர். தம்முடைய தளபதி அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அருள் நபி அண்ணலாரின் கட்டளை களை எடுத்துரைத்தும் அவர்கள் கேட்க வில்லை. பொருட் களை எடுக்கும் பேராவலால் உந்தப்பட்டு களம் புகுந்து விட் டனர்.

உஹதின் பின்பக்க வழியாக ஓடிவந்த எதிரிகள் கண வாயில் அப்துல்லாஹ் இப்னு ஜுபைருடன் ஒரிருவரே இருப் பதைக்கண்டு அவரைக் கடுமையாகத் தாக்கி சித்திரவதைக்கு உள்ளாக்கி விட்டு காலிதிப்னு வலீதுடைய தலைமையின் கீழ் சிதறுண்டு போன எதிரிப்படையினர் ஒன்று திரண்டனர்.

அம்பெய்வதிலே வல்லவரெனப் பெயர்பெற்ற காலிதிப்னு வலீதும் இக்ரிமா இப்னு அபீஜஹலும் தம்படையினர்களைப் பல அணியாகப்பிரித்து பல முனைகளில் முஸ்லிம்கள்மீதுகடும் தாக்குதலைத் தொடுக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு கண வாயின் வழியாகப் பலமிக்க பல பிரிவினராகப் பிரிந்து குபுகுபு வென களத்தில் புகுந்தனர். புகுந்த வேகத்தோடு பல அணி யினராகப்பிரிந்து முஸ்லிம்களைத் தாக்கி அவர்களைநிலை குலையச் செய்தனர். கொஞ்சமும் எதிர்பாராத இக்கடும் தாக்குதலுக்குள்ளான முஸ்லிம் படையினர் என்ன செய்வது? எப்படி நடந்து கொள்வது? யாரிடம் ஆலோசனை கேட்பது? என்பவனற்றை எண்ணிப் பார்ப்பதற்குள்ளே எதிரிகளுடைய கூரிய அம்புகள் தங்கள் மேனியை சல்லடையாக்கின. பல திக்குகளிலிருந்தும் குதிரைப் படையினரைத் திரட்டி வந்த காலிதிப்னு வலீதும் இக்ரிமத்திப்னு அபீஜஹலும் சுழன்று சுழன்று தாக்கினார்கள், பேரறிவும், பேராற்றலுமிக்க ஹம் ஸத்துப்னு அப்துல் முத்தலிபு, முஸ்அப் இப்னு உமைர் போன்ற பெரும் தியாகிகள் ஷஹீதாயினர். இப்படிப்பட்ட

இக்கட்டான நிலை ஏற்பட்டது குறித்து முஸ்லிம்கள் எண்ணி எண்ணி ஏங்கினர்.

இதனிடையே இப்னு கமிய்யாவின் தலைமையில் அனைத்துலகங்களின் அருள் அண்ணல் நபியவர்களைத் தாக்க எதிரிப்படையினர் பெரிதும் முயன்றனர். முஸ்லிம் படையினர் பல திக்கிலும் பிரிந்து விட்டதின் காரணமாக நபியவர்களைச் சுற்றி பதினான்கு வீரர்களே நின்று கொண்டிருந்தனர். இப்படி வீரர்கள் குறைந்திருப்பதைக்கண்ட எதிரிகள் தங்களுடைய அம்புகளையும் ஈட்டிகளையும் சரமாரியாக எறியத் தொடங்கினர். வேகமாகப் பாய்ந்து வந்த அம்புகள் ஸஹாபாப் பெருமக்களுடைய மேனிகளை இரத்தக் கோரையாக்கின. ஒவ்வொரு ஸஹாபியும் எண்ணிறந்தகாயங்களுக்கு உள்ளாயினர். கடுநெஞ்சம் கொண்ட எதிரிகளின் கொடிய அம்புகளில் ஒன்று அருள் வடிவாம் கருணைக் காற்றாம், காத்தமுன்னபியாம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களுடைய ஒளி பொருந்திய நெற்றியைத் தாக்கி கோரைப் படுத்தியது. பிறிதொரு அம்பு அவர்களுடைய அரும் பற்களில் பட்டு அவற்றை ஷஹீதாக்கியது.

இப்படி எதிரிகளுடைய அம்புகள் தொடர்ந்து நபி அவர்களின் பொன் மேனியைத்தாக்கி ரணமாக்கின. இதன்காரணமாக அவர்களின் மேனியில் செங்குருதி பெருக்கெடுத்து ஓடியது. அவர்கள் பலம் குன்றினார்கள். நிற்க முடியவில்லை. தல்ஹா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் துணை கொண்டு கீழே அமர்ந்தார்கள். கடும் தாகம் அவர்களுக்கு ஏற்பட்டது. தண்ணீர் கிடைக்கவில்லை. வெகுதூரம் சென்ற முஹம்மது இப்னு மஸ்லமா என்பவர் தண்ணீர் எடுத்துவந்து ஏந்தல் நபி அவர்களுக்குக் கொடுத்தார்கள். அதனை அவர்கள் பருகினார்கள். என்ன? ஏந்தல் நபியவர்கள் யாருக்கும் எத்தீங்கும் இழைத்து விட்டார்களா? இல்லை, இல்லவே இல்லை. அன்பு நெறி கூறிய அண்ணல் நபியவர்களுக்கா இத்துணை துன்பம்? எண்ணுகிறபோதே உள்ளம் உருகுகிறதே!

அல்லாஹ் ஒருவனே; அவனைத் தவிர வேறு நாயனே இல்லை என்று கூறி அதனடிப்படையில் அமைதியாக மதீனா விலாவது வாழலாம் எனஎண்ணினார்கள். ஆனால் எதிரி கள் விடவில்லை. மக்காவிலிருந்து பலநூறு மைல்கள் கடந்து மாநபி அவர்களுக்கு கொடுந் துன்பத்தைக் கொடுத்தார்கள். நெற்றியைக் கோரையாக்கினார்கள். பற்களை ஷஹீதாக்கி னர்,மூட்டுக்களை காயப்படுத்தினார்கள். இத்துணை கொடிய துன்பத்திற்குள்ளான உத்தம நபியவர்கள் எதிரே பார்க் கிறார்கள். எதிரிகளிடம் ஸஅது இப்னு அபீவகாஸ் ரலியல் லாஹூ அன்ஹூ அவர்கள் போராடிக் கொண்டிருந்தார்கள். இதனைக் கண்ணுற்ற கருணை நபியவர்கள், ''யாஸஅது! எறியுங்கள்! உங்கள் அம்பை எறியுங்கள்! என் தாயும் தந் தையும் உங்களுக்கு அர்ப்பணமாட்டும்!'' என்று மீண்டும் மீண்டும் மொழிந்து கொண்டே இருந்தார்கள்.

அருள் நபியின் அன்புக் குரலை செவியேற்ற ஸஅது இப்னு அபீவகாஸ் ரலியல்லாஹூ அன்ஹூ அவர்கள் கொஞ் சமும் தாமதிக்காமல் தங்களுடைய அம்புகளை எறிந்து கொண்டேயிருந்தார்கள். அவர்கள் எறியும் ஒவ்வொரு அம் பின் போதும், ''எறியுங்கள் யாஸஅது! உங்கள் அம்பை எறியுங்கள்! என் தாயும் தந்தையும் உங்களுக்கு அர்ப்பணமா கட்டும்'' என்று ஏந்தல் நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல் லம் சொல்லிக் கொண்டே இருந்தார்கள்.

சான்றோர் திலகம் ஸஅதிப்னு அபீவகாஸ் ரலியல் லாஹூ அன்ஹூ அவர்கள் கடும் வேகத்துடன் எறியத் தொடங்கினார்கள். அவர்களுடைய அம்புகள் மின் வேகத் தில் பறந்து சென்றன. எதிரிகளைச் சாடின. அவர்களைத் திகில் அடையச் செய்தன. அங்கு மிங்கும் சிதறி ஓடச் செய் தன, தோல்வியின் பக்கமாக வந்த முஸ்லிம் படையினரை எதிரிப்படையினருடன் சமமாக்கின. உஹுதுப் போருடைய நாளில் மட்டும் எதிரிகளுடைய அணிகள் மீது ஸஅதிப்னு அபீவகாஸ் (ரலி) அவர்கள் ஆயிரத்துக்கும் மேற் பட்ட கூரிய அம்புகளை வெகு வேகத்துடன் எறிந்திருக்

கிறார்கள். எதிரிகளுடைய அணிகளைத் தகர்த்தெறிந்திருக் கிறார்கள். அவர்களுடைய அம்புகள் வெறும் அம்புகளா? இல்லை! அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லம் அவர்களுடைய அரும் பிரார்த்தனையுடன் கூடியவை! அவைகள் குறி தவறாதவை! எதிரிகளின் உடலை ரணமாக் கக் கூடியவை! அவர்களுடைய உயிர்களைப் போக்கக் கூடி யவை! எனவேதான் ஏந்தல் நபியவர்கள், ''எறியுங்கள் யா ஸஅது! உங்கள் அம்பை எறியுங்கள்! என் தாயும் தந்தையும் உங்களுக்கு அர்ப்பணமாகட்டும்!'' என்று கூறினார்கள். ''இப் படி அண்ணல் நபி அவர்கள் ஸஅதிப்னு அபீவகாஸ் ரலி யல்லாஹு அன்ஹு அவர்களுக்கே தவிர வேறு எவருக்கும் கூறியதேயில்லை!'' என ஹஜ்ரத் அலீ இப்னு அபீதாலிப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

—★—

6. திருநபியின் பிரியதோழர் ஜுபைர் (ரலி)

இஸ்லாம் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமு மாக செழித்துத் தழைத்தோங்கி வளர்வதற்கு உறுதுணை செய்தவர்களில் ஹஜ்ரத் ஜுபைர் இப்னு அவ்வாம்(ரலி) அவர் களும் ஒருவர். அன்னார் அண்ணலாரின் உறவினருமாவார் கள். ஹஜ்ரத் ஜுபைர் (ரலி) அவர்கள் இளமைக்காலந் தொட்டே அண்ணலாரின் உயர் கொள்கைக்கும், கோட்பாடு களுக்கும் தன்னை உள்ளாக்கிக் கொண்டு அண்ணலார் வகுத்த அறநெறியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார் கள். பதிமூன்றே வயதில் தன்தந்தை அவ்வாம் அவர்களை இழந்து தாயார் ஸபிய்யா அம்மையார் அரவணைப்பில் வளர்ந்தார்கள். தான் பெற்ற மகனைச் சிறந்த முறையில் வளர்த்து உயர்நெறியில் நடைபோடச்செய்ய தாயார்ஸபிய்யா அம்மையார் எடுத்துக்கொண்ட இலட்சியப்பணி இனிதே

நிறைவேறுவதைக்கண்டு ஆனந்தக்கண்ணீர் வடித்தார். தன் மகனை மிகச்சிறந்த போர் வீரனாக உருவாக்கும் பொருட்டுக்கடுமையான உடற்பயிற்சிகளை மேற்கொள்ளச் செய்தார். அதன் காரணமாக ஹஜ்ரத் ஜுபைர் (ரலி) அவர்கள் பராக்கிரமசாலியாக, திண் தோள் வலிமைமிக்க வீர நெஞ்சினராக விளங்கினார். உடல் வளம் வாய்க்கப்பெற்ற ஜுபைர் (ரலி) அவர்கள் தனது பதினைந்தாம் வயதிலேயே பயகம்பர் நபி (ஸல்) அவர்களின் மெய்க்காப்பாளராகப் பணியாற்றும் தகுதியும் பெற்றார், இஸ்லாத்தை எம்பெருமானார் (ஸல்) அவர்கள் திருமக்காவில் எடுத்துரைத்துச் சன்மார்க்கப் பிரச்சாரம் புரிந்திட்ட போது சர்தார் நபியைப் பின்பற்றி இஸ்லாத்தில் இணைந்துவிட்ட முஸ்லிம்களைக் குறைஷிக் கொடு நீலர்கள் பல்வேறு கொடுமைகட்கு இலக்காக்கினர். அதன் காரணமாக அபீசீனியாவுக்கு முஸ்லிம்கள் ஹிஜ்ரத் செய்தனர். அந்தக்குழுவில் ஹஜ்ரத் ஜுபைர் (ரலி) அவர்களும் இடம் பெற்றிருந்தார்கள். சில நாட்களில் அபீசீனியா சென்றவர்களிற் சிலர் மக்கா திரும்பினார்கள். ஜுபைரும் மக்கா வந்தார்கள், பின்னர் பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்த சமயம் ஹஜ்ரத் ஜுபைரும் மதீனா பயணமாகிப் பண்பு நபி வழி மறவாது வாழ்ந்தார்கள். இஸ்லாமிய வரலாற்றில் இடம் பெற்றுள்ள போர்கள் பலவற்றில் தன்னை இடம் பெறச் செய்துக் கொண்டு போர்ப்பணி ஆற்றிய அனுபவமும், பெருமையும் ஹஜ்ரத் ஜுபைர் (ரலி) அவர்களுக்குண்டு இஸ்லாத்தின் முதல் போர் ''பத்ர்'' என்னும் இடத்தில் நிகழ்வுற்றசமயம், ஜுபைர் அவர்கள் கலந்து கொண்டு மேற்கொண்ட வீரசாகசங்களைப் பாராட்டி அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மிகுந்த அன்பளிப்புகள் வழங்கிக் கௌரவித்தார்கள்.

உஹத் யுத்தத்தில் எதிரிகள் எம்பெருமானார் அவர்களை அம்புகளால் துளைத்திட எத்தனித்த சமயம் அண்ணலாரைச் சுற்றிலும் அரண் போல் அமைத்துக் கொண்டு எதிரிகள் தொடுக்கும் அம்பை கேடயமாகத் தங்கள் நெஞ்சை உயர்த்தி நின்று தடுத்துக் கொண்டிருந்த உன்னதத்தோழர்

களில் ஹஜ்ரத் ஜுபைர் (ரலி) அவர்களும் ஒருவராக இருந்தார்கள். அகழ்ப்போரின் போது ஹஜ்ரத் ஜுபைர் (ரலி) அவர்கள் ஆற்றிய பணிபோற்றுதற்குரியது. தாய்க் குலத்தின் பாதுகாப்பிற்காக அரும் பெரும் சேவை செய்திட்ட ஜுபைர் (ரலி) அவர்களை அண்ணலார் அவர்கள் ''திருநபியின் பிரிய தோழர்'' என்று கூறிப் பாராட்டினார்கள். உத்தமர் கலீபா உமர் (ரலி) அவர்கள் ஆட்சிக்காலத்தில் ''யர்மூக்'' என்ற இடத்தில் போர் நிகழ்ந்தது. இப்போரில் எதிரிகளிடையே குழப்பம் விளைவித்து அவர்களைத் தோற்கடிக்கச் செய்த ஹஜ்ரத் ஜுபைர் (ரலி) அவர்களின் போர்த் தந்திரம் பாராட்டத்தக்கததாகும். அவ்வாறே எகிப்தை வெற்றிக் கொண்ட போதும், தளபதி அம்ரு இப்னு அபுல்ஆஸ் (ரலி) அவர்கள் தலைமையில் பணிபுரிந்த ஹஜ்ரத் ஜுபைர் அவர்கள்கெய்ரோ அலெக்ஸாண்டிரியா போன்ற மாபெரும் கோட்டைகளைக் கைப்பற்றுவதற்கு உயர் பங்கு வகித்தார்கள்.

இப்படித் தன்னை இஸ்லாத்திற்காகவும், இஸ்லாமியக் கடமைகளுக்காகவும் என அர்ப்பணித்து வாழ்ந்த இந்தத் திருமகனார் ஹஜ்ரத் உத்மான் (ரலி) அவர்கள் ஆட்சியில் கலகக்காரர்களால் கலீபா உத்மான் (ரலி) கொல்லப்பட்டு ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்கள் கலீபாவாகப் பொறுப்பேற்ற சமயம் அலீயின் ஆதரவாளர்களால் ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு ஆதரவு அளிக்க ஜுபைர் அவர்களும், தல்ஹா அவர்களும் வற்புறுத்தப்பட்டார்கள். அதனை ஏற்காது மக்கா வந்து அன்னை ஆயிஷா (ரலி) அவர்களுடன் உத்மான் (ரலி) அவர்கள் கொலைக்குப் பழிக்குப் பழி வாங்குவதற்குப் பெரும் சேனையொன்றைத் தயார் செய்தார்கள். கலீபா உத்மான் (ரலி) அவர்கள் படுகொலைக்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது சம்பந்தப்பட்டவர்களை எங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற கோரிக்கை ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் கலீபா ஹஜ்ரத் அலீ (ரலி) இக்கோரிக்கையை ஏற்காததால் ''ஒட்டகைப்போர்'' அவசியம் ஏற்பட்டது. ஒட்டகைப்போரில் உத்மானின் ஆதரவாளர்கள் அன்னை ஆயிஷா

(ரலி) அவர்களின் படையினரை அலீயின் வீரர்கள் வெற்றி கொண்டனர். இப்போரில் இருதரப்பிலும் முப்பத்து ஐந்தாயிரம் வீரர்கள் பலியானரர்கள்.

ஹஜ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து மரண தண்டணை நிறைவேற்றப்பட்டது. ஹஜ்ரத் ஜுபைர் (ரலி) அவர்கள் மக்காவிற்குத் தப்பிச் சென்றார்கள். எதிரிகள் பின் தொடர்ந்து சென்று ஹஜ்ரத் ஜுபைர் (ரலி) அவர்களைக் கொலை செய்து விட்டனர். அண்ணலாரின் மெய்க்காப்பாளராகத் திகழ்ந்த அவர் இஸ்லாத்திற்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்ட அந்தத் தியாகச் செம்மல் மார்க்க அனுஷ்டானங்களைக் கடைப்பிடிப்பதற்காகக் காலத்தால் வாழ்ந்த அந்த ஞானமலர் முஸ்லிம்களாலேயே கொல்லப்பட்டதும் கொலை செய்யப்பட்டதும் பரிதாபத்திற்குரியதாகும். தன்னலம் கருதாது வாழ்ந்த அம் மாமனிதரின் முடிவு உள்ளத்தில் வேதனையை ஏற்படுத்துகின்றது. இறுதி வரை இஸ்லாத்திற்காகவும்—சத்திய மார்க்கம் தழைப்பதற்காகவும் உழைத்த அப்பெருமகனாரின் சேவைகள் என்றென்றும் நம் நெஞ்சை விட்டும் நீங்காத ஒன்றாகும். அவருடைய தியாகம் இமயத்தைத் தொடுகின்றது; ஆனால்... அவரின் முடிவு?

7. இறைத்தூதர் (ஸல்) இதயத்தில் இடம் பிடித்த இப்னு தஹ்தாஹா (ரலி)

ஹஜ்ரத் அபூலுபாபா (ரலி)என்ற நபி மணித் தோழர் ஒரு வர் இருந்தார். உதய நபியின் இதயத்தில் தனியான இடம் பிடித்து விட்ட நல்ல மனிதர். வல்லவர். எந்த அளவு அபூ லுபாபா (ரலி)அவர்கள் பெருமானார்(ஸல்) அவர்கள் அன்புக் குத் தகுதி பெற்றார்கள் என்றால்:பத்ரு போருக்குச் செல்லும் வழியில் ''ரவ்ஹா'' என்னும் இடத்தில் வைத்து பயகம்பர் நபி (ஸல்) அவர்கள் ஹஜ்ரத் அபூலுபாபா (ரலி) அவர்க ளைத் தாம் இல்லாத நிலையில் மதீனாவில் பொறுப்பாக இருக்கும் படியும், மதீனாவில் உள்ள பெண்கள், குழந்தை கள், வயோதிகர்கள் அனைவரின் பாதுகாப்புக்காகவும் அபூ லுபாபாவை மதீனாவுக்குத் திருப்பி அனுப்பினார்கள். இந்த அளவு உயர் மதிப்பும் நம்பிக்கைக்குரிய நடத்தையும் பெற் றிருந்தார்கள்.

இந்தக் குண சீலரின் பாதுகாப்பில் ஓர் அனாதையின் சில சொத்துக்கள் தோட்டங்கள் இருந்தன. நாளடைவில் உரியவரான அனாதையிடத்தில் பருவம் வந்தவுடன் தன் பொறுப்பிலிருந்த சொத்துகளனத்தையும் ஒப்படைத்து விட் டார். வளம் நிறைந்த தனக்குச் சொந்தமான ஈச்சமரமொன் றைத் தான் பாதுகாவலர் அபூலுபாபா தவறான முறையில் அபகரித்திருப்பதாக அந்த அனாதை எண்ணி அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் முறையிட்டு அதனை மீட்டுத் தருமாறு வேண்டி நின்றார். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அபூ லுபாபாவை அழைத்து விசாரித்த பொழுது மரம் தனக்கே சொந்தம் என்றார் அபூலுபாபா (ரலி). உண்மை நிலையும் அதுவாகவே இருந்தது. நன்கு விசாரித்து நபிகளார் வழங் கிய தீர்ப்பு அபூலுபாபாவிற்குச் சாதகமாகவும், அனாதைக்கு எதிராகவும் அமைந்தது.

இதுவரை தனதென்றநேதான் கருதியிருந்த ஈச்சமரத்தை இழந்ததினால் மன முடைந்து காணப் பட்டார். இதனைப் புரிந்து கொண்ட பூமான் நபி (ஸல்) அவர்கள் அந்த மரத் தைத் தனக்கு அன்பளிப்பாகத் தந்து விடும் படி அபூலுபாபா விடத்தில் வேண்டினார்கள். கிடைக்கும் அந்த மரத்தை அந்த அனாதைக்கே அளித்து விடும் நோக்கமே அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் இருந்தது. அபூலுபாபா மறுத்து விடுகிறார். சரி! அப்படியானால் ஓ அபூலுபாபாவே! அந்த மரத்தை நீரே அந்த அனாதைக்குக் கொடுத்து விடும், நாளை சுவர்க்கத்தில் அது போன்று ஒன்று உனக்குக் கிடைக் கும் என்றனர் நபிகளார். நடந்து முடிந்த சம்பவங்களும், சட்ட ரீதியான விசாரணைகளும் அவருள் பெரும் ஆத்திரத் தைக் கிளப்பி விட்டிருந்ததன் காரணமாக மீண்டும் மறுத்து விடுகிறார் அபூலுபாபா.

அது சமயம் அங்கிருந்த அன்சாரித் தோழரான தாபித் இப்னு தஹ்தாஹா (ரலி) என்பவர் எழுந்து அல்லாஹ்வின் திருத் தூதரே! அந்த மரத்தை அபூலுபாபாவிட மிருந்து நான் வாங்கி இந்த அனாதைக்கு கொடுத்தால் நாளை மறுமையில் சுவனபதியில் அது போன்று ஒன்று எனக் குக் கிடைக்குமா? என வினவினார். நிச்சயமாகக் கிடைக் கும் என ஏந்தல் நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தனர். நேராக அபூலுபாபாவிடம் சென்று அந்த ஒரு மரத்திற்குப் பிரதியாகத் தனது பேரீச்சமரத் தோட்டம் ஒன்றை கொடுத்து அனாதைக்கு அந்த மரத்தை வாங்கிக் கொடுத்து விட்டார். இப்னு தஹ்தாஹா (ரலி). இதனால் நபி (ஸல்) அவர்கள் பெரி தும் மகிழ்ந்தார்கள். அதே சமயம் அபூலுபாபா அதற்காகக் கவலை கொள்ளவும் செய்தார்கள். இந்த அற்ப உலக வாழ்வை அற்புதமாக எண்ணாமல் சொற்பமான வாழ்வாக எண்ணியே ஏற்றம் பெற்றனர்.

இந்த மாதிரி இனிய வாழ்வும், இரசூல் நபி (ஸல்) வாக்கும், நம்முடைய அன்றாட வாழ்க்கையில் பிணைந்து

இணைந்திட நாம் முயல வேண்டும். தங்கள் குறைகளை எண்ணி மனம் வருந்தி தங்கள் செயல்களைக் குறித்து விண்ணப்பிக்கும் அந்நாளில் வாய்க்குப் பூட்டுப் போடப்பட்டு உறுப்புகள் பேசும் நிலையும், ஏற்படும் மறுமையைப் பயந்து வாழப் பழகிக் கொள்ளுங்கள். அந்தக் கொடுமையான மறுமை நாளில் குற்றவாளிகளின் முகங்கள் இருண்டு அவர்கள் யார் என அடையாளங் காண முடியும். யாரும் யாருக்கும் உதவி செய்ய முடியாத சர்வ அதிகாரமும் அல்லாஹ்விற்கே உரித்தான அந்நாளில் நம்மைத் தற்காத்துக் கொள்ளவும் தாஹா நபி (ஸல்) அவர்கள் பரிந்துரை - ஷபாஅத்- பெற்றவர்களாக மாறிடவும் நல்லறிவு படைத்தவர்களான உங்களுக்கு இதுவே மிகச் சிறந்த உபதேசமாகவும், உணர்ச்சியூட்டும் எழுச்சியாகவும் அமைத்துக் கொள்ளுங்கள். அன்பான அல்லாஹ் அந்த நல்ல உணர்ச்சியை அனைவருக்கும் தந்தருள்பாலிப்பானாக.! ஆமீன்

--★--

8. மாநபி (ஸல்) யின் முறையீடு

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் இரு கண்மணிகளான ருகையாவுக்கும், உம்மு குலஸூமுக்கும், திருமணம் நிச்சயிக்கப்பட்டது. ருகையாவின் மணாளர் உத்பா. உம்முகுல்ஸூமின் மணாளர் உதைபா. இருவரும் எம்பெருமானாரின் பெரிய தந்தை அபூலஹபின் இருபுதல்வர்களாவார்கள். மகிழ்ச்சி பொங்க-மங்களம் துலங்க-இத்திருமணம் உறவினர்கள், ஊரார்கள், அன்பர்கள், நண்பர்கள் ஆனந்தப் பிரவாகத்தோடு நடந்தேறி முடிகின்றது. அருட் பிழம்பான அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்களும் அருகதையற்ற தறுதலை அபூலஹபும் உலக வழக்கப்படி சம்பந்திகளாகி விட்டனர். நீரும் நெருப்பும் ஒரே பாத்திரத்தில் இருக்க முடியுமா? தெற்கும், வடக்கும், ஒன்று சேரமுடியுமா?

மணமக்களை மாப்பிள்ளை வீட்டிற்கு அனுப்பி வைத்திட வள்ளல் நபி (ஸல்) அவர்கள் ஏற்பாடு செய்து கொண்டும், மணமக்களைத் தன் வீட்டிற்கு அழைத்துச் செல்ல அபூலஹப் தயாராகிக் கொண்டும் இருந்தவேளை அமரர் கோன்—வஹீ அறிவிப்பாளர் ஹஜ்ரத் ஜிப்ரயீல் (அலை) வள்ளல் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, ''அபூலஹப்பின் இரு கைகளும் செயல்திறன் அற்று விழட்டும். அவன் மனைவி உம்மு ஜமீல் கழுத்தில் சுருக்கிட்டுச் சாகட்டும்'' என்னும் கருத்தமைந்து துவங்கும் ''தப்பத் யதா'' சூராவை அறிவித்தார்கள். என்ன விநோதம்? நபி மணி (ஸல்) அவர்களும் உடனடியாக 'அபூலஹபும், அவன் மனைவி உம்முஜமீலும் அல்லாஹ்வால் சபிக்கப்பட்டவர்கள்' என்று செய்தியை அறிவித்தார்கள்.

விஷயம் காட்டுத்தீ போல் பரவியது. எங்கும் எதிலும் இதே பேச்சாகவே இருந்தது. ஓடி வந்தனர் உம்முஜமீலும், அபூலஹபும். உத்பாவே! உதைபாவே!! நீங்களிருவரும் எங்கள் பிள்ளைகள் என நிரூபிக்கும் வேளை இப்போது வந்துள்ளது. உங்களிருவரின் மனைவியரை நீங்கள் தலாக் விவாக விலக்குச் செய்யுங்கள். உங்களைப்பெற்று வளர்த்து ஆளாக்கிய எங்களை முஹம்மத் தன் இறைவனிடமிருந்து சபிக்கப்பட்ட வசனங்கள் வந்துள்ளதாகச் சொல்கிறார். நம் முன்னோர்களின் பாரம்பரியத்திலும், பழைய மார்க்கத்திலும் முஹம்மத் இல்லை. எனவே உங்கள் மனைவியர் இருவரையும் விவாக விலக்குச் செய்து விட்டு எங்களுடன் வாருங்கள். என்று குலப் பெருமையும்—குரோத புத்தியும் கொண்டு ஆக்ரோஷமாக கூறினார்கள். பெற்றோர்களுக்குத் தங்கக்கம்பிகளாகத் திகழ்ந்த உத்பாவும் உதைபாவும், ''இரு ஒளிகள்'' என்று போற்றப்பட்ட ருகையாவுடனும், உம்முகுல்ஸூமுடனும் தாங்கள் செய்துக் கொண்ட திருமணப்பிணைப்பை அறுத்துக் கொண்டதாக அறிவித்தனர்.

ருகையாவை மணந்த உத்பா விவாக விலக்குச் செய்துவிட்டுச் சிறிது விவேகமுடன் வீடு சென்று விடுகிறார். உம்மு

குல்ஸூமை மணந்த உதைபாவோ, தன்பெற்றோர்கள் இறைவனால் சபிக்கப்பட்டச் செய்தி கேட்டுச் சீறியெழுந்து கோபம் கொப்பளிக்கக் கோமான்-பூமான்-அண்ணல் பெருமானார் (ஸல்) அவர்களைத் தரக்குறைவாக ஆயிரமாயிரம் அனாச்சார வார்த்தைகளால் அர்ச்சனை செய்கிறான். அபூலஹப்பின் மிகச்சரியான வாரிசு தான் தான் என்பதை இதன் மூலம் புலப்படுத்துகிறான். எத்தனை யெத்தனையோ மனித மிருகங்களை மன்னித்து வரலாற்றில் மங்காப் புகழ்பெற்ற கருணைக்கடல் காத்தமுன்னபீ (ஸல்) அவர்களுக்கு உதைபாவின் உக்கிரமான பேச்சு புண்ணை ஏற்படுத்தி விட்டது போலும். ''யா! அல்லாஹ்!! உதைபாவின் மீது விலங்குகளில் ஒன்றைச்சாட்டுவாயாக'' என முறையிட்டு விடுகின்றார்கள்.

முன்னவன் நபியின் இம்முறையீட்டைச் செவியேற்ற அபூதாலிப் அதிர்ச்சி அடைகின்றார்கள். மாநபியின் எந்த முறையீடும், வீண் போகாது என்பதனைத் தெளிவாகத் தெரிந்தவர்கள். அதன் காரணமாக உதைபா! முஹம்மத் (ஸல்) அவர்கள் செய்து கொண்ட முறையீட்டின் விளைவுகளிலிருந்து உன்னால் தப்பமுடியாது. அநீதமிழைக்கப்பட்டவனுக்கும், அல்லாஹ்வுக்கும், இடையில் திரைகள் ஏதுமில்லை என்பது தீன் குலத் தலைவர் தூதர் நபி வாக்காகும் என்று எச்சரித்தார்கள். இதற்குப்பின் பலமாதங்கள் பாரில் உருண்டோடுகின்றது. ஒரு நாள் மக்காவிலிருந்து சிரியா நோக்கி வாணிபக் குழுவொன்று புறப்படுகின்றது. அக்குழுவில் உதைபாவும், அபூலஹபும் உள்ளனர்.

அபூலஹப் பெருமானார் (ஸல்) அவர்களின் பெரும்பகைவன். அண்ணல் நபி (ஸல்) அவர்களைப் ''பொய்யர்'' எனத் தூற்றித் திரிந்தவன் தான். எனினும் ஏந்தல் நபி தன் மகன் சம்பந்தமாக முறையிட்டதை எண்ணி அவனால் அஞ்சாமல் இருக்க முடியவில்லை. எங்கே அப்படி நடந்து விடுமோ? என்று அஞ்சினான்.

வழிநெடுகில் வணிகக் குழுவினர் உதைபாவின் மீது விழிவைத்துப் பாதுகாத்துப் பிரயாணத்தைத் துவக்கித் தொடர்கின்றனர். வழியில் ஒரு காட்டில் இரவுப்பொழுதைக் கழித்திடவும், பசியாறிக் களைப்பைப் போக்கிடவும், தங்க நேர்கின்றது. பசியாறி உறங்குவதற்கு ஆயத்தம் செய்த பொழுது ''நண்பர்களே! முஹம்மத் என் மகன் உதைபாவின் மேல் விலங்குகளில் ஒன்றைச் சாட்டுவாயாக! என்று அவர் நம்பும் அல்லாஹ்விடம் முறையிட்ட செய்தியை நீங்கள் நன்கு அறிவீர்கள். அதுபற்றிய அச்சம் எனக்கு இன்னமும் இருந்து கொண்டே இருக்கிறது. எதிர்பாராத விதமாக இன்று இரவு விலங்குகள் அதிகம் வாழும் இந்த இடத்தில் நாம் தங்க நேர்ந்து விட்டது. என் அச்சம் இன்னும் அதிக மாகின்றது. எனவே என் மகன் உதைபா மீது நீங்கள் பாது காப்பாகவும், கவனமுடனும் இருந்து கொள்ளுங்கள்,'' என்று தனது அச்சத்தையும், அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அன் றொரு நாள் முறையிட்டதையும் நினைவு கூர்ந்து கூறி முடிக்கின்றான்.

வணிகக் கூட்டத்தினரும், உதைபாவைப் பாதுகாப்பதற் கான ஏற்பாடுகளை மும்முரமாகச் செய்தார்கள். தங்களிட மிருந்த சரக்கு மூட்டைகளை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி உயரமான மேடை ஒன்று தயார் செய்து அதன் மேல் உதைபா உறங்கும்படிச் செய்தும், மற்றவர்களெல்லாம், அம் மேடையைச் சுற்றி வட்டமாகப் படுத்துப் பாதுகாப்பைப் பலப்படுத்திக் கொண்டார்கள். அவர்கள் பாதுகாப்புப் பல மானது. பழுதில்லாதது. அமைதி அரசோச்சிய அக்காட் டில் அவர்கள் அனைவரும் பிரயாணக்களைப்பில் படுத்தனர். ஆழ்ந்த நித்திரை தூக்கம் அவர்களை ஆட் கொண்டது.

எங்கும் இருள் சூழ்ந்த நள்ளிரவு நேரம். அந்த நேரத் துக்காகவே காத்திருந்தது போல காட்டு ராஜா சிங்கம் ஒன்று அடிமேல் அடியெடுத்து வைத்து வந்தது. நெருப்புத் துண் டங்களைப் போன்று ஜொலிக்கும் அதன் இரண்டு கண்களா

லும் அங்கு அயர்ந்து தூங்கிக்கொண்டிருப்பவர்களைஒருமுறை கூர்ந்து பார்த்தது. ஒவ்வொருவரின் வாயையும் நுகர்ந்து பார்த்து விட்டு முடிவில் அங்கு அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த உதைபாவை ஒரே நொடியில் இனங்கண்டதைப்போல இருளிலும் பளிச்சிடும் தன் கூரிய நீண்ட பற்கள் கொண்ட வாயைத் திறந்து பூனை எலியைக் கவ்விப் பிடிப்பதுபோல அச்சிங்கம் உதைபாவின் கழுத்தை இறுகக்கவ்விக் கடித்துக் குதறித் தூக்கிப் புரட்டி அடித்தது.

அப்பெருங்காடே அதிர்ந்து போகும்படி ஒரே ஒருமுறை தான் உதைபா அலறினான். அலறல் ஒலி கேட்டு அபூலஹபும், அவன் வணிக நண்பர்களும், மேடை நோக்கிப் பாய்ந்தனர். அன்பு மகன் உதைபாவை அபூலஹப் அள்ளி அணைத்தான். கையெல்லாம் குருதி வெள்ளம். சுருதி முடிந்து சுருண்டு கிடந்த மகனை நோக்கி விட்டுப் பின் பக்கம் திரும்பிப் பார்த்தான். தன் வேலை முடிந்தது எனச் சிங்கம் ஒன்று இருளில் சென்று கொண்டிருப்பது லேசாகத் தெரிந்தது. சிங்கத்தின் வாயில் சிக்கிச் சிதைந்து விட்ட தன் மகனின் உடலைக் கண்டுக்கண்ணீர் விட்டான்; கதறியழு தான்; விம்பினான். முஹம்மதின் முறையீடு பொய்யன்று என்று தன் பிற்கால வாழ்வில் பிதற்றித் திரியலானான். ஆனால் இறை சாபக்கேட்டினால் இறுதிவரை ஈமானியப் பிரகாசம் இல்லாத இழி மனிதனாகவே வரலாற்றில் வரையறுக்கப்பட்டு விட்டான். அன்பின் சகோதரீர்! பார்த்தீர்களா! கேட்டீர்களா!!

ஒருபரம விரோதி பயகம்பர் நபி (ஸல்) அவர்கள் பொன்மொழி மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்ததை நீங்கள் அறியலாம். ஈமானியத்தனத்தை ஏற்காவிட்டாலும் பூமானின் பொன் மொழிகள் பொய்யல்ல மெய்யே! என்று நம்பியதை விளங்கலாம்.

—★—

பொருளடக்கம்

9. ஆட்சி துறந்த ஆத்மஞானி இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்)

அரசபதவி துறந்த பிறகும் சிற்சில சமயங்களில் இப்றாஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் தங்கள் பணியாட்கள் புடை சூழ ஆடம்பரமாகப் பிரயாணம் செய்வதோடு தான் தங்கும் கூடாரத்தைத் தங்க முளைகளால் அடித்து கூடாரம் அமைப்பார்கள். இப்படி ஒரு சமயம் பாலைவனத்தில் பண்பாளர் இப்னு அத்ஹம்(ரஹ்)தங்கியிருந்த போது ஸூஃபி ஒருவர் அவ்வழியாக செல்ல நேர்ந்தது. அரச பதவி துறந்து ஆன்மீகப் பதவி பெற்ற ஞானி யொருவர் இத்தகைய ஆடம்பர வாழ்க்கை நடத்துவதைப் பார்த்து மிகவும் வியப்படைந்து இப்றாஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்களை அணுகி ஸூஃபி எனக்கூறிக் கொள்ளும் நீங்கள் இவ்வளவு உல்லாச பொருட்களை வைத்துக்கொண்டு, தங்கக் கம்பிகளினால் கூடாரம் அமைத்து இருப்பது விநோதமல்லவா? இது சரியாகுமா? எனக் கேட்டார்.

இப்றாஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் உடனே பதிலளிக்காது அவரைத் தம்முடன் இருக்க வைத்து விருந்துபசாரம் செய்து பிறகு தன்னுடன் மக்கா வரும்படி அழைத்தார்கள். அந்த ஸூஃபியும் இசையவே அவருடன் ஹஜ்ரத் இப்றாஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் விலை மதிப்பில்லாத பொருட்களையும், பணியாட்களையும், தங்க முளைக் கூடாரத்தையும் அப்படியே அந்த இடத்தில் போட்டு விட்டு மக்கா நோக்கிப் பயணமானார்கள்.

சில மைல்கள் சென்றவுடன் தனது மரக்கோப்பையை (திருவோட்டை) கூடாரத்தில் மறந்து வைத்துவிட்டு வந்தது அந்த ஸூஃபிக்கு நினைவு வந்ததும் திரும்பச்சென்று அதை எடுத்துவர இப்றாஹீம் இப்னு அத்ஹம் அவர்களிடம் அனு

மதி கோரினார். அப்பொழுது இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் அவரை நோக்கி ''தோழரே! நமக்கு மத்தியில் வித்தியாசம் இதுதான். என்னுடைய ஏராளமான விலைமதிப்பில்லாத பொருட்களையெல்லாம் துறந்து—மறந்து – உங்களுடன் மக்காவுக்குப் புறப்பட்டேன். அப்பொருட்களுக்காக வருத்தப்படாமல் இருக்கவும் என்னால் முடிகிறது. ஆனால் அதே சமயத்தில் உங்களின் உடமையான அந்த அற்ப மர(க்கோப்பை)ப் பாத்திரத்தை விட்டு வந்திட உங்களால் முடியவில்லை. உங்களின் ஆச்சரியத்துக்குக் காரணமான அந்தத் தங்கமுளைகளை நான் மண்ணில்தான் ஊன்றினேன். எனது (கல்பில்) உள்ளத்தில் ஊன்றவில்லை.'' என்று அமைதியாகப் பதில் அளித்தார்கள். வெட்கத்தால் வெலவெலத்த அந்த ஸூஃபி தன் தவறை உணர்ந்து ஹஜ்ரத் இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்களிடம் மன்னிப்பு வேண்டினார்.

இறைவனுக்கு நன்றி செலுத்தும் எண்ணம் வந்திடும் பொழுது மனிதன் உடல் உயிர் பொருள் அனைத்தையும் அல்லாஹ்வுக் கென்று அர்ப்பணித்துத் தியாகம் செய்திடவும், துறந்திடவும், முன் வந்து விடுகிறான். இத்தகு சிறந்த நிலையையே தன் சமுதாயத்தவர் கொண்டு வாழ வேண்டுமென வள்ளல் நபி (ஸல்) அவர்கள் விரும்பினார்கள். அதற்காக வாழ்க்கை நமூனாவையும் சமர்ப்பித்தார்கள். நபி மணி (ஸல்) அவர்கள் நல் வாக்குக்கேற்ற இல்வாழ்வு பெற்று இம்மை மறுமையிரண்டிலும், வெற்றி பெற்றிட முயலுங்கள். அல்லாஹ்வின் அருள் பெற முன் வாருங்கள்.



பொருளுடைத்தும்

10. அண்ணலாருக்கு ஆலோசனை வழங்கிய ஸல்மான் ஃபார்ஸி (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மஸ்ஜிதுன் னபவீயில் அமர்ந்திருக்கிறார்கள். அப்போது ஒருவர் வருகிறார். வந்தவர் நபிகளாரை நோக்கி பேச ஆரம்பித்தார். ''தாங்கள் இறைவனுக்கு நெருக்கமான நல்லடியார் என்றும், நாடு துறந்து வந்த எளியோர்கள் தங்களுடன் உள்ளார்கள் என்றும் கேள்விப்பட்டேன். என்னிடம் சிறிதளவு 'சதகா' (தர்மம்) பொருள் உள்ளது. அதைப்பெற்றுக்கொள்ள உங்களைவிட எவர் தகுதியாயிருக்க முடியும்? எனவே அதனை ஏற்றுக் கொள்ளுங்கள்.''

நபி (ஸல்) அவர்கள் அவரை ஏறிட்டுப் பார்த்தார்கள். சதகா பொருளை வாங்கி அங்கிருந்த தோழர்களுக்கு வழங்கி அவர்களை சாப்பிடும்படி கூறினார்கள். எனினும் நபியவர்கள் அதனை சாப்பிடவில்லை. சதகா பொருளைக் கொண்டு வந்த அந்த மனிதர் திரும்பிச் சென்று விட்டார். மீண்டும் மறுநாள் வந்தார். உணவுப் பொருட்களையும் உடன் கொண்டு வந்திருந்தார். அண்ணலாரை நோக்கி ''நேற்று தாங்கள் சதகா பொருளை சாப்பிடவில்லை; இன்று இது எனது அன்பளிப்பு; தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்'' என விண்ணப்பித்தார்.

நபி (ஸல்) அவர்கள் அந்த அன்பளிப்பை ஏற்றுக்கொண்டார்கள். தானும் சாப்பிட்டார்கள்; மற்றவர்களுக்கும் வழங்கினார்கள். இப்போது அம்மனிதர் நபி (ஸல்) அவர்களின் பரக்கத்துப் பொருந்திய பின்புற தோற்றத்தைப் பார்த்துக் கொண்டேயிருந்தார். தற்செயலாக அவர்களின் மேலாடை விலகியது. அம்மனிதர் நபிகளாரின் முதுகில் வட்ட வடிவமான நபித்துவ அடையாளத்தைக் கண்டார். உடனே அதனை முத்தமிடக் குனிந்தார்!

நபி (ஸல்) அவர்கள் அவரை நோக்கி, ''முன்னால் வாரும்!'' என்றார்கள். அவர் முன்னால் வந்தார். தமது தோழர்கள் அனைவரையும் அழைத்தார்கள். எல்லோரும் வந்ததும் அம் மனிதரை நோக்கி, ''உம்மைப்பற்றி அறிமுகம் செய்வீராக!''என ஆணையிட்டார்கள்.

அவர் பேச ஆரம்பித்தார்.

அல்லாஹ்வின் நல்லடியார் அவர்களே! எனது பெயர் 'மாபா' என்பதாகும். ஈரான் நாட்டின் பிரபல நகரமாகிய இஸ்பஹான் அருகிலுள்ள 'ஜீ' என்ற கிராமமே எனது ஊர். எனது தந்தை அவ்வூரின் நிலக்கிழார். விவசாயம் அவருக்கு மிக விருப்பமான தொழில். தானே முன்நின்று விவசாய வேலைகளை கவனித்து வந்தார். என்மீது மிகவும் பாசம் வைத்திருந்தார். பெண்களை அலங்கரிப்பது போன்று எனக்கு அலங்காரம் செய்வார். வீட்டை விட்டு வெளியே போகவிட மாட்டார். நெருப்பை வணங்கும் மஜூஸியாக இருந்தார். என்னையும் நெருப்பை வணங்கும்படி கூறி மஜூஸி மதத்தைப்பற்றி எனக்கு விளக்கம் கூறிக் கொண்டே யிருந்தார். என் தந்தைக்கு முற்றிலும் வழிப்படும் மகனா யிருந்தேன். என் தந்தையின் பேச்சைக் கவனமாகக் கேட்டு மனதில் பதிய வைத்து நெருப்பை பூஜித்துக்கொண்டிருந் தேன். நான் சிறுவனாக இருந்த போதே நெருப்பு அணைந்து விடாதபடி வணங்குபவன் என்ற புகழ்பெயர் பெற்றிருந்தேன்.

ஒரு நாள் என் தந்தை வீட்டை மராமத் செய்துகொண்டி ருந்தார். விவசாயம் அறுவடைக்கு தயாராக இருந்தது. அதைக் கவனிக்க செல்ல இயலவில்லை. நான் சற்று பெரிய வனாக ஆகியிருந்தேன். வீட்டை விட்டு வெளியில் செல்ல துவங்கியிருந்தேன். விவசாய வேலைகளைக் கவனிக்க என்னை அனுப்பி வைத்தார். சென்றேன். வழியில் ஒரு வீடு தென்பட்டது. அப்போது அவ்வீட்டில் நிறைய கிறிஸ்தவர்கள் கூடியிருந்தார்கள். வணக்கம் புரிந்து கொண் டிருந்தார்கள். நான் நின்று கவனித்துக் கொண்டிருந்தேன்.

அவர்களின் வணக்க வழிபாடுகள் என் மனதுக்கு பிடித்தமாகி விட்டது. என்மனதுக்குள் இவ்வாறு சொல்லிக்கொண்டேன். ''கிறிஸ்தவ மதம் நமது மஜூஸி மதத்தைவிட சிறந்ததாக உள்ளது.''

பின்னர் கிறிஸ்தவர்களிடம் கேட்டேன்; ''உங்கள் மதத்தின் தலைமையகம் எங்கே உள்ளது?'' ''சிரியாவில் உள்ளது'' என பதில் கிடைத்தது. அவர்களுடன் பேசிக் கொண்டிருந்ததில் மாலை நேரமாகிவிட்டது. அவர்களிடம் விபரம் கேட்டுக் கொண்டு வீடு திரும்பினேன். என் தந்தை என்னை நோக்கி ''ஏன் இவ்வளவு தாமதம்? எங்கு போயிருந்தாய்?'' எனக்கேட்டார். நான் சொன்னேன். ''சில மனிதர்கள் சர்ச்சில் வணங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் செயல் பாடுகள் என் மனதுக்கு நல்லதாகத் தோன்றியது. சூரியன் மறையும் வரை அங்கிருந்து விட்டேன்,''

என் தந்தை சொன்னார்; அவர்களின் மதம் நம் மதத்தைவிட சிறந்ததல்ல. நான் சொன்னேன். இறைவன் மீது சத்தியமாக அந்த மதம் நம் மதத்தைவிட எவ்வளவோ மேலானது.

எனது இந்த பதிலைக் கேட்டதும் என் தந்தை அதிர்ச்சி யடைந்து விட்டார். மகன் மதம் மாறிப் போய் விடுவானோ என எண்ணி வீட்டை விட்டு வெளியே செல்ல விடவில்லை. எனினும் நான் அவ்வப்போது தெரியாமல் அங்கே போய் வந்து கொண்டிருந்தேன். என் தந்தைக்குத் தெரிந்தபோது அவர் கடும் கோபம் கொண்டார். என்னை தனி அறையில் சிறை வைத்து விட்டார். என் மனத்துடிப்பு இன்னும் அதிக மாகியது.

கிறிஸ்தவர்களிடம் சேதி சொல்லி அனுப்பினேன். அதாவது யாராவது சிரியா செல்லும் பயணக்குழு ஏதேனும்புறப் பட்டால் எனக்கு சொல்லி அனுப்புங்கள்.

இறைவன் நாட்டம். சில நாட்களில் ஒரு வணிகக் கூட்டம் சிரியா செல்வதாக செய்தி வந்தது. சிறையிலிருந்து ஒரு வழியாக தப்பித்து வணிக கூட்டத்துடன் சேர்ந்து கொண்டேன். சிரியா போய்ச் சேர்ந்தேன். அங்குள்ள மக்களிடம் ''இங்கு மிகச் சிறந்த மார்க்க அறிஞர் யார்?'' என்று கேட்டேன். அவர்கள் ஒரு பாதிரியாரைக் காண்பித்தார்கள். அவரைச் சந்தித்தேன். என் நிலைமையைக் கூறினேன். அவருடைய மதத்தில் சேர்ந்து கிறிஸ்தவராகி விட்டேன். அவருக்கு ஊழியம் செய்து கொண்டிருந்தேன். பிறகுதான் எனக்குத் தெரிய வந்தது. அந்த பாதிரி மிகவும் மோசமானவர் என்பது. மக்களை நல்லது செய்யும்படி ஏவுகிறார். ஆனால் அவர் அவ்வாறு செயல் படுவதில்லை. மக்களிடமிருந்து ஏழை எளியோருக்காக தர்மப் பொருட்களை வாங்கி தனது உபயோகத்திற்கு வைத்துக்கொள்கிறார். மிஞ்சுவதை சேமிக்க ஆரம்பித்தார், இவ்வாறு சேமித்து வைத்தது ஏழு பானைகள் நிரம்ப தங்கமும் வெள்ளியுமாக சேர்ந்து விட்டது. அவரது பேராசையைக்கண்ட எனக்கு மிகவும் அதிருப்தியும் கோபமும் ஏற்பட்டது. பொது மக்களிடம் தெரிவித்து விடலாம் என பலமுறை நினைத்தேன். எனினும் பாதிரியாரைப் பார்த்தால் பயமாக இருந்தது.

ஒருநாள் அவர் இறந்தே விட்டார். அவரது மோசடிகளை மக்களுக்கு மத்தியில் எடுத்துரைத்தேன். மக்கள் அவர் சேமித்து வைத்திருந்த தங்க வெள்ளி குவியலைக் கைப்பற்றினார்கள். அவரது செயலுக்காக அவரது பிணத்தை சிலுவையிலறைந்து கல்லாலெறிந்தார்கள்.

அதன் பின்னர் வேறொரு பாதிரி அவரது இடத்தில் நியமிக்கப் பட்டார். இவர் மிகவும் நல்லவராகவும் பேணுதலானவராகவும் இருந்தார். இரவு பகலாக வணங்கிக் கொண்டிருந்தார். அவரை நான் மிகவும் நேசித்தேன். அவரிடம் எனது நிலையைக் கூறினேன். அவருக்கு ஊழியம் புரிந்தேன்: அவரும் என்மீது வெகுவாக அன்பு பாராட்டினார்.

தனது மனதில் உள்ள விஷயங்களையெல்லாம் எனக்கு தெரியப்படுத்தினார்.

அவருக்கு மரணம் நெருங்கிய போது நான் அவரை நோக்கி, ''நான் தங்களிடம் சிலகாலம் இருந்துள்ளேன். தாங்கள் என்மீது மிகவும் அன்பு செலுத்தினீர்கள். இப்போது தங்களின் கடைசி நேரமாக உள்ளது. இனி நான் யாரிடம் செல்வது?'' எனக் கேட்டேன்.

அவர் கூறினார்;

என் அறிவுக்கு எட்டியவரை ஈஸா நபி (அலை) அவர்களை முழுமையாகப் பின்பற்றக்கூடிய எந்த கிறிஸ்தவரும் தென்படவில்லை. கிறிஸ்தவர்கள் ஈஸா நபியின் போதனைகளை மாற்றி விட்டார்கள். எந்த சட்டங்களில் சிரமம் உள்ளதோ அவற்றை அகற்றி விட்டார்கள். தாங்களாகவே பல சட்டங்களை சேர்த்துக்கொண்டார்கள். எனினும் 'மூசில்' எனுமிடத்தில் ஒருவர் உள்ளார். அவரிடம் மார்க்கத்தின் சரியான ஞானம்உள்ளது. அவரைச் சென்று சந்தித்துக்கொள்.

அன்புக்குரிய பாதிரி இறந்தபின் மூசில் சென்றேன், தேடிப்பிடித்து அந்த பாதிரியை சந்தித்தேன். எனது கதை முழுவதையும் கூறினேன். அவர் என்னை தன்னுடன் தங்க வைத்துக் கொண்டார். இந்த பாதிரியும் மிகவும் நல்லவராக இருந்தார். அவரிடம் மிகவும் கற்றுக் கொண்டேன். எனினும் அவரும் சிறிது காலத்தில் மரண எல்லைக்கு சென்று விட்டார். ''இப்போது நான் எங்கே செல்வது?'' என அவரிடம் கேட்டேன். அவர் நஸீபைன்' என்ற ஊரின் பாதிரியாரின் விலாசத்தைக் கூறினார்.

அங்கு போய்ச் சேர்ந்தேன். அந்த பாதிரி எல்லோரை விட சிறந்த மார்க்க பக்தியுள்ளவராக இருந்தார். எனினும் அவரையும் மரணம் நெருங்கியது. அதன்பின் ஆலோசனை செய்து ''உமூரிய்யா''வின் மிகப்பெரிய பாதிரியிடம் சென்றேன், அவரது மரண நேரத்தில் அவரிடம்நான் கூறினேன்.

சிறிது தூரம் செல்கிறேன்
ஒவ்வொரு வழிகாட்டியுடன்
எனக்குரிய சரியான வழிகாட்டியை
நான் அடைந்து கொள்ள வில்லையே

அவர் பதில் கூறினார்:

மகனே! நான் என்ன சொல்வேன். இப்போது உலகில் சத்திய மார்க்கத்தை ஏற்றுக் கொள்பவர் எவருமில்லை, சத்திய மார்க்கத்தை அறிபவனும் யார் உள்ளார்கள்?

நிச்சயமாக அந்த நபி அதிவிரைவில் வெளியாகவுள்ளார். அவரைப் பற்றி நீங்கள் பரிசுத்த வேதத்தில் படித்துள்ளீர்கள். அந்த நபி அரபுநாட்டு பாலைவனத்தில் தோன்றுவார். இப்ராஹீம் நபியின் மார்க்கத்தை உயிர்ப்பிப்பார். அவர் பேரீத்த மரங்களடர்ந்த தோட்டங்களின் பக்கம் ஹிஜ்ரத் செய்வார்.

அவரது அடையாளங்கள் இதுவாகும்.

1. அவர் அன்பளிப்புகளை ஏற்றுக்கொள்வார்.
2. தர்மமாக வந்ததை உண்ணமாட்டார்.
3. அவருடைய இரு புஜங்களுக்கு இடையில் வட்ட வடிவமான ஒரு அடையாளம் உப்பி காணப்படும்.

அவரை நீ சந்தித்தால் உனக்கு முழுமையான மன அமைதி கிடைக்கும்.

இவ்வாறு கூறிய சிறிது காலத்தில் அந்த பெரிய பாதிரியும் இறந்து போனார். நான் அங்கேயே தங்கியிருந்தேன். ஏதேனும் பயணக் குழுவினர் அவ்வழியாக வந்தால் ''எங்கே போகிறீர்கள்?'' என்று கேட்டுக்கொண்டிருந்தேன். எனது பெரும் பாக்கியம்! அரபு நாட்டு வணிகர்கள் சிலர் வந்தனர். அவர்களோடு சேர்ந்து கொண்டேன். எனினும் அவர்கள் என்னை மோசம் செய்து விட்டனர். என்னை அடிமையாக்கி

ஒரு யூதனிடம் விற்று விட்டனர். அந்த யூதன் தனது சித்தப்பா மகனுக்கு என்னை விற்று விட்டான். அவன் என்னை மதீனாவுக்கு கொண்டு வந்தான். இங்குள்ள பேரீத்த தோட்டங்களைப் பார்த்ததும் என் மனத்துடிப்பு அதிகமாகியது. மக்களிடம் விசாரித்துக் கொண்டே திரிந்தேன். என் கேள்விக்கு விடைகிடைக்கவில்லை.

ஒருநாள் என் எஜமானனின் தோட்டத்தில் மரத்தில் வேலைசெய்து கொண்டிருந்தேன். கீழே எஜமானன் உட்கார்ந்திருந்தான்; திடீரென ஒரு மனிதன் வந்தான். ஒரு சமுதாயத்துப் பெயரைக் குறிப்பிட்டு மேலும் சொல்ல ஆரம்பித்தான்: ''அல்லாஹ் அந்த சமுதாயத்தை நாசமாக்கட்டும்! யாரோ ஒருவர் மக்காவிலிருந்து வந்திருக்கிறாராம்! அவர் நபியாம்!! அவரிடம் எல்லோரும் போய் நிற்கிறார்கள்.''

இது என் காதில் விழுந்ததுதான் தாமதம், என் கால்கள் நடுங்க வாரம்பித்தன. உடலில் அதிர்ச்சி, மரத்திலிருந்து இறங்கினேனா விழுந்தேனா அறியேன். வந்த அம்மனிதனை நோக்கி, ''நீங்கள் என்ன சொன்னீர்கள்?'' என கேட்டேன். இவ்வாறு கேட்டுக் கொண்டிருக்கும் போதே என் எஜமானன் குறுக்கிட்டு என்னை ஒரு குத்து குத்தினான். அதட்டலான குரலில் ''உன் வேலையைப் பார்! இதுவெல்லாம் உனக்குத் தேவையில்லை'' என்றான். நான் மௌனமாகி விட்டேன். எனினும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. சிறிது உணவுப் பொருட்கள் அருகிலிருந்தது. எடுத்துக் கொண்டு நேற்று தாங்கள் சமுகம் வந்தேன். சதகா என்று கூறி சமர்ப்பித்தேன். மற்றவர்களுக்கு பங்கிட்டுக் கொடுத்தீர்கள். தாங்கள் சாப்பிடவில்லை. உமூரிய்யாவின் பெரிய பாதிரி கூறிய ஒரு முன்னறிவிப்பு சரியாகி விட்டது. நேற்று நான் திரும்பிச் சென்றேன். இரவில் தூக்கம் என் கண்களைத் தழுவ மறுத்து விட்டது. இன்றும் சந்தர்ப்பம் பார்த்து மீண்டும் வந்தேன். இன்று அன்பளிப்பு என்ற முறையில் சமர்ப்பித்தேன். தாங்கள் ஏற்றுக்கொண்டு பிற

ருக்கும் வழங்கி தாங்களும் சாப்பிட்டீர்கள். பாதிரியார் கூறிய இரண்டாம் முன்னறிவிப்பும் சரியாகி விட்டது. இப்போது தங்களின் புஜங்களுக்கிடையில் இருக்கும்(நபித்துவ முத்திரை) அடையாளத்தைப் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதையும் பார்த்துக் கொண்டேன். தாங்கள் உண்மை நபி என்று எனக்கு உறுதி ஏற்பட்டு விட்டது. நான் எனது நாட்டத்தைப் பெற்றுக் கொண்டேன். இறைவனுக்கு நான் மிகவும் நன்றி செலுத்துகிறேன். உண்மைதான்! நான் எதைத் தேடினேனோ அதை அடைந்து கொண்டேன்.

இந்த நீளமான உண்மையான சுயசரிதையைக் கேட்ட அனைவரும் மகிழ்ச்சி அடைந்தனர். நபி (ஸல்) அவர்களோ மிகவும் சந்தோஷம் அடைந்தார்கள். இந்த சுயசரிதையைக் கேட்ட முஸ்லிம்கள் அனைவரும் தங்கள் ஈமானில் உறுதியைக் கண்டனர். நபி (ஸல்) அவர்கள் அவருக்கு 'ஸல்மான்' என பெயரிட்டார்கள். எனவே இப்போது 'மாபர' ஹஜ்ரத் ஸல்மான் ரலியல்லாஹு அன்ஹுவாக மாறிவிட்டார்.

ஸல்மான் (ரலி) அவர்கள் அடிமைத்தளையில் இருந்தது நபி(ஸல்) அவர்களுக்கு மிகவும் பாரமாகத் தோன்றியது. அவர்களை அழைத்து ''உங்கள் எஜமானனிடம் சென்று எதையாவது பகரமாக கொடுத்து அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெற்று வாருங்கள்'' என்றனர். ஸல்மான் (ரலி) யூதரிடம் போய் விஷயத்தைக் கூறினார்கள். விடுதலை செய்ய வேண்டுமானால் முன்னூறு பேரீத்தங் கன்றுகளும் நாற்பது ஊகியா தங்கமும் தரவேண்டும் என யூதன் கேட்டான்.

ஒரு அடிமை இவ்வளவு பணத்துக்கு எங்கே போவார்? ஈருலக ரட்சகர் எம்பெருமான் (ஸல்) அவர்கள் இஸ்லாமியப் பெருமக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்கள், ''உங்கள் சகோதரருக்காக உதவி செய்யுங்கள்!'' அன்று வாழ்ந்த முஸ்லிம் பெருமக்களுக்கிடையில் அன்பும் பாசமும் சகோதரத்துவமும் தழைத்தோங்கியிருந்தது. ஒரு முஸ்லிம் சகோதரன் துன்புறுவது எவருக்கும் தாங்க இயலாது.

எனவே ஒவ்வொருவரும் ஒன்று, இரண்டு, நான்கு என பேரீத்தங்கன்றுகளை கொண்டு வந்தனர். இதோ முன்னூறு கன்றுகளும் கிடைத்துவிட்டன. அடுத்து தங்கம் வேண்டுமே! அல்லாஹ் ஒரு அடியாரை சோதித்து முடித்து விட்டால் உதவியும் தாமதமின்றி வந்து விடுமல்லவா!

அதே நாள் மாலை நேரம். ஒரு யுத்தகளத்திலிருந்து ஒரு கோழிமுட்டை பருமன் உள்ள தங்கங் கட்டி 'கனீமத்' பொருளாக வந்து சேர்ந்தது. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அதனை ஸல்மான் (ரலி) அவர்களுக்கு வழங்கி விட்டார்கள், அந்த தங்கத்தின் எடை சரியாக நாற்பது ஊகியா இருந்தது. ஆம்! அல்லாஹுத ஆலா ஹஜ்ரத் ஸல்மான் (ரலி) அவர்களுக்காகவே அதனை அனுப்பிவைத்தான் போலும்.

ஸல்மான் (ரலி) அவர்கள் அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெற்று அண்ணலார் (ஸல்) சமூகம் வந்தார்கள். நிரந்தரமாக நபியவர்களுடனேயே தங்கி விட்டார்கள். ஹஜ்ரத் ஸல்மான் பார்ஸீ (ரலி) அவர்கள் வந்தபின் முஸ்லிம்களுக்கிடையில் ஒரு சுவையான சர்ச்சை ஏற்பட்டது. அதாவது ஸல்மான் (ரலி) முஹாஜிரா? அன்சாரியா? ஒவ்வொரு தரப்பினரும் தங்களைச் சார்ந்தவர் என்பதற்கான ஆதாரங்களை கூறிக் கொண்டிருந்தனர்.

முஹாஜிர்கள் கூறினார்கள்; ஸல்மான் (ரலி) சத்திய மார்க்கத்தை தேடிக் கொண்டு நாடு துறந்து, வீடு துறந்து தாய் தந்தையரைத் துறந்து பல்வேறு சிரமங்களை அடைந்து இஸ்லாத்தை தழுவியுள்ளார்கள். எனவே அவர் முஹாஜிர் தான்.

அன்சாரிகள் கூறினார்கள்: ஸல்மான் (ரலி) அவர்கள் இஸ்லாத்தைத் தழுவும் முன்னரே மதீனா வந்து தங்கி விட்டார்கள். எனவே அவர் அன்சாரிதான்.

முஸ்லிம்களுக்கிடையே நடந்த இந்த சுவையான வாதங்களை செவியுற்ற நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வுக்கு நன்றி

செலுத்தினார்கள், மேலும் கூறினார்கள்: ஸல்மான் எமது குடும்பத்தில் ஒருவர் ''அஹ்லபைத்'' பின்னர் ஹஜ்ரத் அபூ தர்தா (ரலி) உடன் சகோதரராக இணைத்து விட்டார்கள்.

ஹஜ்ரத் ஸல்மான் (ரலி) அவர்கள் இஸ்லாத்தைத் தழு விய போது 'பத்ரு' 'உஹது' ஆகிய யுத்தங்கள் நடந்து முடிந் திருந்தன. அதற்குப் பின் நடந்த அனைத்து போர்களிலும் அவர்கள் கலத்து கொண்டார்கள். வீர பராக்கிரமத்துடன் யுத் தம் செய்தார்கள். பெரும்பாலான யுத்தங்கள் ஸல்மான் (ரலி) அவர்களின் அழகிய ஆலோசனைப் படி நடந்தது. அல்லாஹ் வெற்றி அளித்தான்.

ஹஜ்ரத் ஸல்மான் (ரலி) அவர்கள் இஸ்லாத்தைக் தழு விய பின் முதன் முதலாக அகழ் யுத்தத்தில் கலந்து கொள் ளும் வாய்ப்புக் கிடைத்தது. அந்த யுத்தத்தில் முஸ்லிம்க ளுக்கு எதிராக அரபிகள் அனைவரும் ஒன்று திரண்டு மதீ னாவை நோக்கி வந்து கொண்டிருந்தனர். இஸ்லாமிய எழுச் சியை வேருடன் பிடுங்கி எறிய கங்கணம் கட்டியவாறு வந்து கொண்டிருந்தனர்.

மதீனாவில் கோட்டையோ கொத்தளமோ பாதுகாப்பான இடமோ எதுவுமில்லை. நபி (ஸல்) அவர்கள் தமது தோழர் களை அழைத்து ஆலோசனைசெய்தார்கள். ஸல்மான் பார்ஸீ (ரலி) அவர்கள் ஈரானில் நடந்த பல யுத்தங்களைப் பார்த்தி ருக்கிறார்கள். மேலும் பல யுத்த தந்திர முறைகளையும் நன் றாக அறிந்திருந்தார்கள்.

எனவே அவர்கள் எழுந்து ''யா ரசூலல்லாஹ்! பெரும் படையை, திறந்த மைதானத்தில் எதிர்ப்பது சரியாகாது! எனவே மதீனாவை சுற்றிலும் அகழ் தோண்டி முற்றிலும் பாதுகாப்பு செய்து கொள்ள வேண்டும்'' என்று ஆலோசனை கூறினார்கள். இந்த யோசனை அனைவராலும் ஏற்றுக்கொள் ளப் பட்டு செயல்படுத்தப் பட்டது.

அரபிகள் இந்த யுத்த முறையை அறிந்தே இருக்க வில்லை. வேகமாக வந்த காபிர்கள் அகழைப் பார்த்ததும் அவர்களுக்கு என்ன செய்வதென்றே புரிய வில்லை. பல நாட்கள் முற்றுகை யிட்டு விட்டு தோல்வியுடன் திரும்பினார் கள்.

ஹஜ்ரத் ஸல்மான் (ரலி) அவர்கள் யுத்தம் துவங்குமுன் எதிரிகளின் முன்னிலையில் இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளையும் அதன் சிறப்பம்சங்களையும் எடுத்துரைப் பார்கள், வாக்கு வாதம் முடிந்த பின்னர்தான் வாளோடு வாள் உராயும்.

உதாரணமாக ஈரானின் கோட்டை முற்றுகையிடப்பட்ட போது கோட்டையினுள்ளே குழுமியிருந்த ஈரானியர்களை நோக்கி இஸ்லாத்தைப்பற்றி எடுத்துரைத்தபின் பின்வருமாறு பேசினார்கள்.

''நான் உங்கள் நாட்டைச் சார்ந்தவன். எனினும் அல்லாஹ் எனக்கு இஸ்லாத்தை வழங்கி கவுரவித்துள் ளான். எனதருமை சகோதரர்களே! நீங்கள் முஸ்லிம் களுக்கு கட்டுப்படுவதைத் தவிர வேறு வழியே இல்லை. தப்ப முடியாது. நான் உங்களுக்கு உபதேசிக்கிறேன். நீங்களனைவரும் இஸ்லாத்தைத் தழுவி எங்களின் சகோ தரர்களாக ஆகிவிடுங்கள். முஸ்லிம்களின் அனைத்து உரிமைகளும் உங்களுக்கு வழங்கப்படும். முஸ்லிம்களுக்கு எந்த சட்டங்கள் உள்ளனவோ அவையே உங்களுக்கும் உரியதாகிவிடும்.

இது ஒரு நீண்ட சொற்பொழிவு. மூன்று நாட்கள் வரை இப்படியே சொற்பொழிவு செய்தார்கள். ஈரானியர்கள் வழிக்கு வரவில்லை. இஸ்லாமியர்கள் வாளேந்தினார்கள். அன்றே கோட்டை கைப்பற்றப்பட்டுவிட்டது.

இவ்வாறே பிற்காலத்தில் நடைபெற்ற பல யுத்தங்க ளில் ஹஜ்ரத் ஸல்மான் (ரலி) அவர்கள் பல நல்ல ஆலோ சனைகளை வழங்கி யுள்ளார்கள். ஹஜ்ரத் அபூபக்கர் சித்தீக் (ரலி) ஹஜ்ரத் உமர் பாரூக் (ரலி) ஆகியோரின் ஆட்சிக் காலத் திலும் நடைபெற்ற யுத்தங்களில் சிறந்த ஆலோசனைகளை வழங்கியதோடு நின்றுவிடாமல் தாமே யுத்தங்களுக்கு சென்று நேரடியாக விளக்கிக் கூறி தாமும் யுத்தத்தில் கலந்து கொண் டுள்ளார்கள்.

நபி (ஸல்) அவர்களுடனேயே இருந்து வந்ததால் மார்க்க அறிவு நிரம்பியவர்களாக விளங்கினார்கள், நபி (ஸல்) அவர் களே ஒரு முறை இவர்களைப் பாராட்டியுள்ளார்கள்.

ஹஜ்ரத் ஸல்மான் பார்ஸி (ரலி) அவர்கள் பொருளாதார நிலையிலும் கூட நபி (ஸல்) அவர்களை முழுமையாகப் பின் பற்றினார்கள். ஸல்மான் (ரலி) அவர்களுக்கு குடியிருக்க வீடு கிடையாது. நபி (ஸல்) அவர்களின் வாழ்நாள் முழுவ தும் அவர்களின் நிழலிலேயே காலம் கழித்து விட்டார்கள். நபி (ஸல்) அவர்களின் மறைவுக்குப்பின்னும் வீடு கட்டிக் கொள்ளவில்லை.

ஒரு மனிதர் வந்து ''தங்களுக்கு வீடு கட்டித்தருகிறேன்'' என்று வேண்டினார். ''எனக்குத் தேவையில்லை'' என பதிலளித்தார்கள். மீண்டும் மீண்டும் அவர் பிடிவாதம் செய்து ''தாங்கள் எப்படி விரும்புகிறீர்களோ அவ்வாறு கட்டித்தரு கிறேன்'' என்றார். அப்போது ஸல்மான் (ரலி) அவர்கள் ''அப்படியானால் ஒரு சிறு குடிசையை அமைத்துத் தாருங் கள். நிற்கும்போது தலை முகட்டில் படவேண்டும். படுத் தால் கால் சுவரில் படவேண்டும்'' என்று கூறினார்கள். அந்த மனிதரும் மகிழ்ச்சியாக ''அப்படியா! தாங்கள் கூறுகிற படியே செய்கிறேன்'' என்று கூறி அவ்விதமே சிறு குடில் ஒன்றை அமைத்துத் தந்தார்.

ஒரு முறை இவர்கள் 'மதாயின்' பகுதியின் ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்தார்கள். இவர்கள் மிகவும் எளிமையான தோற்றமும் எளிமையான ஆடை அணிந்த நிலையிலும் இருந்தார்கள். இவர்களின் எளிமையான தோற்றத்தைக் கண்ட மக்களில் சிலர் 'கூலிக்காரர்' என்று நினைத்துக்கொண்டனர். ஒரு முறை இவர்களை சாதாரண மனிதர் என நினைத்து ஒருவர் தமது சுமைகளைத் தூக்கி வருமாறு பணித்தார். இவர்களும் அதை எடுத்து சுமந்து கொண்டு நடக்கவாரம்பித்தார்கள், வழியில் இவர்களை அறிந்த பலர் ''அஸ்ஸலாமு அலைக்கும் யா அமீர்'' என்று சலாம் கூறி ''அந்த சுமையை எங்களிடம் தாருங்களேன். நாங்கள் கொண்டு போய் சேர்ப்பித்து விடுகிறோம்'' என்று வேண்டினார்கள். ஆனால் இவர்கள் மறுத்து விட்டார்கள். அந்த மனிதருக்கு மிகவும் வெட்கமாகப் போய்விட்டது.

ஹஜ்ரத் ஸஅத் இப்னு அபீவக்காஸ் (ரலி) கூறுகிறார்கள்;

ஹஜ்ரத் ஸல்மான் பார்ஸீ (ரலி) நோய் வாய்ப்பட்டிருந்தார்கள். அவர்களை நலம் விசாரிக்கச் சென்றிருந்தேன்.

என்னைப் பார்த்ததும் அழ ஆரம்பித்தார்கள். நான் கூறினேன். ''இது அழ வேண்டிய நேரமில்லையே! நாயகம் (ஸல்) அவர்கள் உலகைப் பிரியும் போது உங்கள் மீது அன்பு வைத்த நிலையில் பிரிந்தார்கள். ஹவ்ளுல் கவ்தரில் உங்களை சந்திப்பார்கள். முன் சென்ற தோழர்களையும் நீங்கள் சந்திப்பீர்கள்'' என கூறினேன். இதைக் கேட்ட ஸல்மான் (ரலி) அவர்கள், ''அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நான் மரணத்தைப் பற்றி அஞ்சவில்லை. உலகைப்பற்றிய எந்த ஆசையும் எனக்கில்லை. நான் ஏன் அழுகிறேன் என்றால் நான் நபி (ஸல்) அவர்களிடம் நமது உலக வாழ்விற்கான சாதனங்கள் ஒரு வழிப்போக்கனுக்கு இருப்பதைப் போன்றே இருக்க வேண்டும் என உடன்படிக்கை செய்திருந்தேன். ஆனால், என்னிடம் இந்த பாம்புகளைப் போன்ற சாமான்களெல்லாம் சேர்ந்து விட்டனவே'!

ஹழ்ரத் சஅத் இப்னு அபீவக்காஸ் (ரலி) கூறுவதாவது, பாம்பு என குறிப்பிட்டுக் கூறிய அதிகமான சாமான்கள். ஒரு பெரிய கோப்பை, ஒரு வட்டப்பாத்திரம், ஒரு பணிக்கம் இவற்றைத்தான் பெரிய உலக செல்வம் என கருதி விட்டார்கள்.

ஹழ்ரத் ஸல்மான் (ரலி) அவர்கள் சத்திய மார்க்கத்தை இரவு பகலாக தேடினார்கள். வீடு வாசல் தாய் தந்தை ஊர் அனைத்தையும் துறந்தார்கள். சத்தியமார்க்கம் கிடைத்ததும் அதன் ஞானங்களை முழுமையாகக்கற்று அதன் படி தம் வாழ்வை அமைத்துக் கொண்டார்கள். வாழ்வின் ஒவ்வொரு அசைவிலும் அல்லாஹ், ரசூலின் திருப்தியையே பெரிதென மதித்தார்கள். பொது வாழ்விலும் ஆளுநராக பதவியிலிருந்த போதும் எளிமையை ஒருபோதும் கைவிடவில்லை.

ரலியல்லாஹு அன்ஹு